Registered as a news paper.
பக்கங்கள்: பத்து
விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

ஆசியாவின் நம்பர் 1 சீமேந்து
SLS 107 அங்கீகாரம் பெற்றது.
ISO 9002 தரம் பெற்றது.
BSS 12 - 1991 தரத்திற்கு அமைவானது.
இவை அனைத்தையும் கொண்ட உயர்தர சீமேந்து.
ராம்கோ ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
சீமேந்து
(சி-485)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 மாசி 22 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 முஹறம் 02 (06.03.2003) வியாழக்கிழமை இதழ் :154




கண்காணிப்புக்குழுவின் புதிய தலைவருக்கு, தேசியத் தலைவர் புலிச்சின்னம் பொறித்த நினைவுப்பரிசை வழங்குவதை முதலாவது படத்திலும், கண்காணிப்புக்குழுவினருடனான சந்திப்பில் தேசியத் தலைவருடன் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் மற்றும் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் ஆகியோர் அமர்ந்திருப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# துப்பாக்கிச் சத்தங்கள் ஓய்ந்துள்ளதே தவிர மக்கள் மீதான கெடுபிடிகள் குறையவில்லை

## கண்காணிப்புக் குழுத் தலைவர்களிடம் பிரபா விசனம்

(கிளிநொச்சி)

**தேசியத் தலைவர் வே.பிரபாகரன் - போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் புதிய தலைவருடனும், ஓய்வுபெற்றுச் செல்லும் தலைவருடனும் நேற்றுக் கலந்துரையாடல் ஒன்றை நடத்தினார். இச்சந்திப்பின்போது, யுத்தநிறுத்த ஒப்பந்தம் மூலம் துப்பாக்கிகள் மட்டுமே ஓய்ந்துள்ளன தவிர, மக்கள் மீதான கெடுபிடிகள் குறைவடையவில்லை எனத் தலைவர் பிரபாகரன், கண்காணிப்புக்குழுத் தலைவர்களிடம் தமது விசனத்தை நேரில் தெரிவித்தார்.**

இச்சந்திப்பின்போது - தேசியத் தலைவருடன், அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம், தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் புதிய தலைவர் ரெலவ்சன், ஓய்வுபெற்றுச் செல்லும் தலைவர் புறூவ் ஹெொவ்டே ஆகியோர் தமிழீழ தேசியத் தலைவருடனான சந்திப்பை நடாத்தினர். நேற்று முற்பகல் 11 மணியில் இருந்து பிற்பகல் ஒருமணிவரை கிளிநொச்சியில் உள்ள அரசியற்துறை நடுவப் பணியகத்தில் இச்சந்திப்பு நடைபெற்றது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மேலும் 21 இந்திய மீனவர்கள் காரைநகர் கடற்படையால் கைது!

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டிருந்த இருபத்தியொரு இந்திய மீனவர்கள் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டனர்.

நேற்று நண்பகல், நான்கு இந்திய மீன்பிடிப் படகுகள் காரைநகர் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்தன. இப்படகுகளை, கடற்படையினர் வழிமறித்துத் தடுத்துநிறுத்தினர். பின்னர், அங்கிருந்து இருபத்தியொரு மீனவர்களும் படகுகளுடன் சேர்த்து காரைநகர் கடற்படைத்தளத்துக்கு கொண்டுசெல்லப்பட்டனர். இந்த மீனவர்களை கடற்படை அதிகாரிகள் விசாரணைக்குட்படுத்தினர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழக மீனவர்கள் மத்தியில் இந்திய கடற்படையினருமா?

### சந்தேகத்திற்கிடமான படகொன்று தப்பிச்சென்றது

(மன்னார்)

மன்னார் கடற்பரப்புக்குள் அத்துமீறி ஊடுருவிய இந்திய மீனவர்களுடன் இந்தியக் கடற்படைச் சிப்பாய்களும் இணைந்திருந்தனரா என்பது குறித்துப் பரபரப்பான தகவல்கள் வெளியாகியுள்ளன.

நேற்றுமுன்தினம் மாலை தலைமன்னார் பழைய பாலத்தடி கடற்பரப்புக்குள் இந்திய மீன்பிடிப் படகுகள் அத்துமீறி ஊடுருவி வந்து மீன்பிடியில் ஈடுபட்டிருந்தன.

இதனைத் தொடர்ந்து உள்ளூர் மீனவர்கள் அப்பகுதிக்கு விரைந்து சென்றனர். அப்பகுதியில் காணப்பட்ட

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தலைவர் பிரபாவின் பணிப்பின் பேரில் கைதான இரு படையினரும் விடுதலை



விடுவிக்கப்பட்ட படையினருடன் புலிகள் தரப்பினரும் கண்காணிப்புக்குழுவினரும்.

(கிளிநொச்சி)

புலிகளின் நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டிருந்த சிப்பாய் ஒருவரும், பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரும் தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் பணிப்பின் பேரில் நேற்றுப் பிற்பகல் விடுதலை செய்யப்பட்டனர்.

தமிழீழ தேசியத் தலைவருக்கும், போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர்களுக்குமிடையில் மூன்று மணி நேரம் இடம்பெற்ற சந்திப்பின் பின்பே, தலைவர் பிரபாகரன் - விடுதலை செய்வதற்கான

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கைதிகள் உண்ணாவிரதம்; தலைவர் பிரபா கரிசனை

(கிளிநொச்சி)

களுத்துறையில் உண்ணாவிரதமிருக்கும் தமிழ் கைதிகள் தொடர்பாக, புலிகளின் தலைவர் பிரபாகரன் தனது கரிசனையை நேற்றுத் தெரிவித்தார்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர்களுடன் நேற்று நடைபெற்ற சந்திப்பின்போதே அவர் தனது கரிசனையை வெளியிட்டார்.

## விண்ணாணம் விநாசியர்



ஊடுருவல் உப்பதானே உண்மையை உடைக்குது...!

## மண்டபம் முகாமிற்கு கல் வீச்சு!

இலங்கைத் தமிழ் அகதிகள் தங்கியிருக்கும், மண்டபம் அகதி முகாம் மீது நேற்று தாக்குதல் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நேற்றுக்காலை, அப்பகுதிக்குச் சென்ற கும்பல் ஒன்று மேற்படி முயற்சியில் ஈடுபட்டது. எனினும், பொலிஸார் அவர்களை அங்கிருந்து விரட்டி விட்டனர். எனினும், மாலை மூன்று மணியளவில் மீண்டும் ஒரு கும்பல் தடி, பொல்லுகள் மற்றும் கற்கள் சகிதம் தாக்குதல் முயற்சியில் ஈடு

(10 ஆம் பக்கம் பார்க்க)

SERENDIB AIRLINE
யாழ்ப்பாணத்தில் இருந்து வெள்ளவத்தை வரையும் அழையுங்கள்
021-2223916, 0777-517019, 01-505632, 074-612656, 01-390128.
(சி-518)

## தேசியத் தலைவருடன் - போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் சந்திப்பிலிருந்து...





## கிளிநொச்சியில் நடைபெற்ற மகளிர் விவகார உபகுழுக் கூட்டத்திலிருந்து...







## நேற்றுமுன்தினம் நடைபெற்ற யுனிசெப் - விடுதலைப் புலிகள் சந்திப்பிலிருந்து...





### யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட அனுமதி:

# தவறுதலாக 8 பேரின் விவரங்களை மானிய ஆணைக்குழு வெளியிட்டது!

யாழ்.பல்கலைக்கழக கலைப் பீடத்திற்கு விசேட அனுமதியின் கீழ் அனுமதிக்கப்பட்டிருந்த எட்டுப் பேரினுடைய பெயர் தவறுதலாக வெளியிடப்பட்டுள்ளதாக பல்கலைக் கழகங்கள் மானிய ஆணைக்குழு அறிவித்துள்ளது.

கடந்தவாரம் கலைப்பீடத்திற்கு தெரிவு செய்யப்பட்டதாக அறிவித்திருந்த 215 பேரில் எட்டுப்பேரின் பெயர்கள் தவறுதலாக வெளியிடப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள் ளது.

அவர்களின் பெயர், விபரம் வருமாறு-

எஸ்.சிந்துஜா, எல்.வீரசிங்கம், கே.புவனா, கே.சுஜீதா, வி.கோகுல வாணி, ஆர்.குணசிங்கம், ஜே.பிரியா, ஆர்.ரேணுகாதேவி ஆகியோரே அந்த எட்டுப்பேருமாவர்.


## சிறுவிளம்பரம்

### தவறிவிட்டது.

கடந்த 28.02.2003 அன்று முக்கிய ஆவணங்கள் அடங்கிய கறுப்பு நிற கைப்பபை ஒன்று முகமாலைக்கும் மிருசுவிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து நமது ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைததுதவவும். சன்மானம் வழங்கப்படும்.

### ஆசிரியர் தேவை

6 இல் இருந்து O/L வரை கணித பாடம் கொடுக்கக்கூடிய, அனுபவமிக்க ஆசிரியர் உடன் தேவை. 3 மணிக்குப் பின் தலைமை ஆசிரியர், விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426 (302), கே.கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

ராஜா
யாழ்ப்பாணம்.
இன்று 51 ஆவது தினம்



விஜய், ஸ்நேகா, மணிவண்ணன், வடிவேல் நடித்த
வசீகரா
10.30, 2.30, 6.30 மட்டும்
(சி-628)

நிறஞ்சனாஸ் சங்கானை
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
ஷாம், மீராஜஸ்மீன் நடித்த
பாலா
வெள்ளி. சனி. ஞாயிறு இரவு 8.45 மணி காட்சி
U 571
அதிரடித் தாக்குதல் நிறைந்த படம்.
(சி-627)

தில்லையம்பதி மோட்டார்ஸ்
இல.236,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
AGENTS FOR-GREAVES, SPARE PARTS
- விவாசாய நீர் இறைக்கும் இயந்திரம், மின்சார நீர் இறைக்கும் இயந்திரம் மற்றும் உதிரிப்பாகங்கள் விற்பனையாளர்கள்.
- மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.


## இன்றைய நாள் இனிய நாள்

### 06-03-2003 - வியாழக்கிழமை

**மேடம்** :- பெண்களால் நன்மை, பெரியோர் மதிப்பு, இல்லச்சிறப்பு வெளியூர் பிரயாணம்.

**இடபம்** :- விபத்துகள், வாக்குக்கலகம், குடும்ப மனஸ்தாபம், பிரயாசை மிகுதி, வாகன சுகம்.

**மிதுனம்** :- கோபமிகுதி, பெரியோர் மதிப்பு, பொருள்வரவு, புத்திரசுகம், நண்பரால் உதவி.

**கர்க்கடகம்** :- தாரபுத்திரருக்கு ரோகம், வீண்பழிகேட்டல், நிலைமாற்றம் மனக்கவலை

**சிங்கம்** :- ஊக்கமிகுதி, பிரயாணக் கவலை, பொருள் விருத்தி, அதிகாரசித்தி, பணவரவு.

**கன்னி** :- பொருள் விருத்தி, களஸ்திரசுகம், தொழில் கஷ்டம்,இன சன கொண்டாட்டம்.

**பிரபல சோதிடர் எஸ்.குகநேசன்**

**துலாம்** :- தனித்த நிலை, காரியத்தடை, குடும்பமகிழ்ச்சி, உறவினரால் கவலை.

**விருச்சிகம்** :- காலில் ரோகம், சிநேகலாபம், புத்திதிறமை, நற்குணவிருத்தி

**தனு** :- இரத்தப்பெருக்கு, பொருள் நஷ்டம், பிரயாசை மிகுதி, அற்பலாபம்.

**மகரம்** :- நன்மதிப்பு, பலவித பொருட்பேறு, பெண்களால் நன்மை, வாகன லாபம்.

**கும்பம்** :- தொழில் கேடு, வீண் மனஸ்தாபம், தேகசுகக்குறைவு தாழ்ந்தநிலை, ஏமாற்றம்.

**மீனம்** :- சௌபாக்கியம், காரிய அனுகூலம், இல்லச்சிறப்பு, வாகனசுகம்.

### கம்பன் மகன் நாட்டுக்கூத்து

திருமறைக் கலாமன்றம் நடாத்தும் "கம்பன் மகன்" எனும் நாட்டுக்கூத்து நாளை மறுநாள் சனிக்கிழமை மாலை 7 மணிக்கு இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

### சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினர் நடாத்தும் வாராந்த நிகழ்ச்சித் தொடரில் நாளை வெள்ளிக்கிழமை காலை 10.30 மணியளவில் சி.தில்லைமணியின் பண்ணிசை நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

# களுத்துறைச் சிறைக்கைதிகளுக்கு ஆதரவாக நீர்கொழும்பு, அனுராதபுரத்திலும் உண்ணாவிரதம்!

(கொழும்பு)

களுத்துறைச் சிறைச்சாலையில் சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்துள்ள தமிழ் அரசியற்கைதிகளில் ஏழுபேர் மயக்கமடைந்துள்ளதாகத் தெரியவருகின்றது.

களுத்துறைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியற் கைதிகளில் 61 பேர் உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தி வருகின்றனர். இப்போராட்டத்தினால் கைதிகள சோர்வடைந்தநிலையில் காணப்படுவதாகவும், ஏழு கைதிகள் மயக்கமடைந்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

தமது போராட்டம் குறித்து உரிய நடவடிக்கையை அரசாங்கம் எடுக்காதுவிட்டால், நீராகாரம் அருந்துவதையும தாம் நிறுத்திவிடப்போவதாகவும், அத்துடன் சிறைச்சாலைக் கூரைமீது ஏறியிருக்கப்போவதாகவும் கைதிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருகின்றது.

இதேவேளை, களுத்துறைச் சிறையில் கடந்த முதலாம் திகதி முதல் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் கைதிகளுக்கு ஆதரவாக நீர்கொழுமபு மற்றும் அனுராதபுரம் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 14 தமிழ் அரசியற் கைதிகளும் நேற்று முன்தினம் தொடக்கம் உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

அத்துடன், சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியற் கைதிகளை விடுவிப்பதற்குத் தமிழீழ விடுதலைப்புலிகள் அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கவேண்டும் என்று மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு யோசெப் கோரிக்கை விடுத்துள்ளார்.

அடுத்தசுற்றுச் சமாதானப் பேச்சுக்களின்போது விடுதலைப் புலிகள் இந்த அழுத்தத்தை அரசு மீது பிரயோகிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

# கடலூர் சிறையில் அடைக்கப்பட்ட நெடுமாறன் சித்திரவதை செய்யப்படுவதாகக் குற்றச்சாட்டு

## நேரில் பார்த்து வந்த ஸ்ராலின் அதிர்ச்சித் தகவல்



மு.க.ஸ்டாலின்

பொடா சட்டத்தின் கீழ் கடலூர் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிக்கும் தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன்-சிறையில் சித்திரவதை செய்யப்படுவதாக தி.மு.கவின் இளைஞரணிச் செயலாளர் மு.க.ஸ்ராலின் தெரிவித்தார்.

கடலூர் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பழ. நெடுமாறனைச் சிறையில் சந்தித்து விட்டு, வெளியில் செய்தியாளர்களிடம் பேசியபோதே ஸ்ராலின் இவ்வாறு தெரிவித்தார்.

நோயுற்ற நிலையிலும் நெடுமாறனை தமிழக அரசு சிறையிலடைத்துச் சித்திரவதை செய்து துன்புறுத்துவதாக அவர் கண்டனம் தெரிவித்தார். அத்துடன், பொடா சட்டத்தைத் தமிழக அரசு தவறாகப் பயன்படுத்தி வைகோவையும் சிறையில் அடைத்திருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.



பழ.நெடுமாறன்

இதேவேளை, சில மாநில அரசாங்கங்கள் பொடா சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்துவதால், சட்டத்தில் திருத்தங்களைச் செய்வதற்கு மத்திய அரசு முடிவெடுத்திருப்பதாகத் தெரியவருகின்றது.

தமிழக மற்றும் உத்தரப் பிரதேச மாநில அரசாங்கள் பொடா சட்டத்தைத் தமது அரசியல் எதிரிகளுக்கு எதிராகப் பயன்படுத்துவதாக மனித உரிமை அமைப்புக்கள் மற்றும் அரசியல் கட்சிகளிடமிருந்தும் பலத்த எதிர்ப்புக்கள் கிளம்பியுள்ளன. இதையடுத்தே, இந்திய மத்திய அரசு-பொடா சட்டத்தில் சில திருத்தங்களை மேற்கொள்ள முடிவு செய்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# சந்திரிகா - ஜே.வி.பி. சந்திப்பில் கூட்டணி குறித்து இறுதி முடிவு

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் - மக்கள் விடுதலை முன்னணியின் முக்கிய பிரமுகர்களுக்கும் இடையிலான பேச்சுக்கள் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்றதாகத் தெரியவருகின்றது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் - ஜே.வி.பிக்கும் இடையிலான அரசியற் கூட்டணியை அமைப்பது தொடர்பான பேச்சுக்கள் நடைபெற்று வருகின்றன. இப்பேச்சுக்களின்மூலம் இருதரப்பும் கூட்டணியை அமைப்பது என்ற இறுதிமுடிவை எடுத்திருப்பதாக ஜனாதிபதி செயலகத்துக்கு நெருக்கமான வட்டாரங்களிலிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்துள்ளன.



**கோயிலாக்கண்டிப் பகுதி மீனவர்களை 24 மணிநேரம் மீன்பிடிக்க அனுமதிப்பது தொடர்பாக கடந்த திங்களன்று கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. இதில் வறணியிலுள்ள 52 ஆவது படையணித்தளபதி, அமைச்சர் மகேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டிருப்பதைப் படத்தில் காணலாம்.**

# சிறானுடன் இணைந்து செயற்பட அரச அதிகாரிகளுக்குப் பணிப்புரை!

## பிரதமர் அலுவலகத்திலிருந்து உடனடி உத்தரவு

வட-கிழக்குப் பகுதிகளில் உள்ள அரச அலுவலங்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் அனைத்தும் சிறான் அலுவலகத்துடன் கலந்தாலோசித்து முடிவுகளை எடுக்குமாறும், சிறான் அலுவலகத்துடன் நெருக்கமான உறவுகளை வைத்திருக்குமாறும் பிரதமர் அலுவலகத்திலிருந்து உத்தரவு வழங்கப்பட்டிருக்கிறது.

இந்த அறிவித்தற் கடிதங்கள் வட - கிழக்குப் பகுதிகளிலுள்ள அனைத்து அரச அதிபர்கள், பிரதேச செயலகர்கள் மற்றும் திணைக்கள, கூட்டுத்தாபனத் தலைவர்கள் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

வட - கிழக்குப் பகுதிக்கான உடனடிப் புனர்வாழ்வு, புனரமைப்பு, மனிதாபிமானத் தேவைகளை நிறைவேற்றுவதற்காக அமைக்கப்பட்டுள்ள சிறான் அலுவலகத்துடன் இணைந்து பணியாற்றுமாறும், அபிவிருத்தி மற்றும் வேலைத்திட்டங்கள் தொடர்பாகச் சிறானுடன் கலந்தாலோசனை செய்து முடிவுகளை எடுக்குமாறும் பிரதமர் அலுவலகத்திலிருந்து அனுப்பப்பட்டுள்ள உத்தரவுக் கடிதங்களில் குறிப்பிடப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

### வலயமட்ட கற்றல் - கற்பித்தல் உபகரணப்போட்டி

யாழ். வலயமட்டத்தில் நடைபெற்ற ஆசிரியர்களுக்கான கற்றல்-கற்பித்தல் உபகரணப்போட்டியில், பாஷையூர் புனித அந்தோனியார் றோ.க. மகளிர் வித்தியாலய ஆசிரியைகளான திருமதி சாந்தன் 1 ஆம் தரத்திலும், செல்வி பொ.அன்ரனிப்பிள்ளை 2 ஆம் தரத்திலும் சித்தியடைந்துள்ளனர். (119)



**யாழ்.இமையாணன் அ.த.க. வித்தியாலய மெய்வல்லுநர் போட்டியின்போது பிரதம அதிதி வே.தி.செல்வரத்தினம் (கல்விப்பணிப்பாளர் வடமராட்சி வலயம்) வீ.சி.சிவநாதன் (முகாமையாளர் இலங்கை வங்கி -நெல்லியடி) ஆகியோர் - அதிபர், ஆசிரியர், மாணவர்களினால் வித்தியாலய விளையாட்டு மைதானத்திற்கு அழைத்து வரப்படுகின்றனர்.**

# வட-கிழக்கில் 45 ஆயிரம் சிறார்கள் பாடசாலைகளுக்குச் செல்லாதுள்ளனர்!

## மாகாணக் கல்வியமைச்சு செயலாளர் தகவல்

(கொழும்பு)

கடந்த இருபது வருடகாலமாக நீடித்த யுத்தத்தினால் வட - கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்த மாணவர்களில் 25 சதவீதமானோருக்கு விசேட தேவைகள் இருப்பதாக வட - கிழக்கு மாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் எஸ்.தியாகலிங்கம் தெரிவித்துள்ளார்.

முறைசாராக்கல்வி மற்றும் கல்வி அதிகாரிகளுக்காக நடத்தப்பட்ட செயலமர்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு உரையாற்றிய அவர் மேலும் குறிப்பிட்டதாவது -

வட - கிழக்குப் பகுதி மாணவர்கள் யுத்த சூழ்நிலைகளால் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். 75 சதவீதமான மாணவர்கள் மருத்துவ உதவிகளைப் பெறவேண்டிய நிலையிலுள்ளனர்.

அத்துடன், வட - கிழக்குப் பகுதிகளில் மட்டும் 45 ஆயிரம் சிறாாகள் பாடசாலைகளுக்குச் செல்லாதுள்ளனர். பெருமளவு மாணவர்கள் இலவசக் கல்வியை இடைநிறுத்தியமைக்கு வறுமை மற்றும் சமூகக் காரணிகள் காரணமாக இருந்துள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# அக்குரஸ்ஸ பிரதேசசபைத் தேர்தல் பிரசாரங்கள் நள்ளிரவோடு முடிவு

(கொழும்பு)

அக்குரஸ்ஸ பிரதேசசபைக்கான தேர்தல் பிரசாரங்கள் நேற்று நள்ளிரவுடன் முடிவுக்கு வந்திருப்பதாகத் தேர்தல் திணைக்கள் வட்டாரங்கள் தெரிவித்தன.

அக்குரஸ்ஸ பிரதேசசபைக்கு நாளை மறுநாள் சனிக்கிழமை தேர்தல் நடத்தப்படவுள்ளது. இத்தேர்தலில் போட்டியிடும் பொதுஜன ஐக்கிய முன்னணி, ஜே.வி.பி. மற்றும் சிங்கள மகா சம்பத பூமிபுத்திரக் கட்சி ஆகியவற்றுக்கிடையில் பலத்த போட்டி நிலவிவருகின்றது.

சில இடங்களில் ஜே.வி.பி. மற்றும் பொதுஜன ஐக்கிய முன்னணி ஆதரவாளர்கள் மத்தியில் மோதல்கள் இடம்பெற்றதாக அக்குரஸ்ஸ பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். சுவரொட்டிகளை ஒட்டுவதில் பிரச்சினைகள் ஏற்படுவதாகவும், இதனால் ஆங்காங்கே மோதல்கள் இடம்பெற்றதாகவும் அவர் மேலும தெரிவித்துள்ளார்.

இந்தத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி தனது ஆதரவாளர்களை சிங்கள மகாசம்பத பூமிபுத்திரக் கட்சியின் வேட்பாளர்களுக்கு ஆதரவளிக்கும்படி கோரியிருப்பதாக அக்கட்சியின் பேச்சாளரான கஜந்த கருணாதிலக தெரிவித்துள்ளார்.

அககுரஸ்ஸப் பிரதேசசபைக்கு ஐ.தே.கவின் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனு - நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க)

### மகளிர் தின விழா

மகளிர் அபிவிருத்தி நிலையமும், யாழ்ப்பாண சமூக செயற்பாட்டு மையமும் இணைந்து நடாத்தும் மகளிர் தினவிழா நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் மருத்துவபீட பீடாதிபதி பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளதுடன், தெற்கிலிருந்து வருகை தரும் பெண்கள் அமைப்பினரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

முதலாவது அகவையில்



பெயர் : தே.பிரியதனுசன்
முகவரி: சக்கோட்டை.

ஒன்பதாவது அகவையில்

பெயர் : செ.கமலினி
முகவரி: மல்லிகை கலட்டி, கரவெட்டி.



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்



வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:--------------------------------
முகவரி :--------------------------------
பிறந்த ஆண்டு:--------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

--------------------
பெற்றார் ஒப்பம்


# புதிய படைப்பிரிவின் பாதுகாப்பைப் பெற நான்கு அமைச்சர்கள் பின்னடிப்பு!

(கொழும்பு)

முக்கியமான அரசியல்வாதிகளின் பாதுகாப்புக்கென அமைக்கப்பட்டிருக்கும் புறடக்ரிவ் செக்யூட்ரிட்டி றேஞ்சர்ஸ் என்ற விசேட பாதுகாப்புப் படைப்பிரிவின் பாதுகாப்பைப் பெறுவதற்கு நான்கு அமைச்சர்கள் பின்னடிப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பிரதமர் பாதுகாப்பு பிரிவையும், அமைச்சர்கள் பாதுகாப்புப் பிரிவையும் ஒருங்கிணைத்து, இந்தப் புதிய படைப்பிரிவு முக்கிய பிரமுகர்களின் பாதுகாப்புக்கென அமைக்கப்பட்டது. இப்படைப்பிரிவு இந்தியப் பாதுகாப்பு நிபுணர்களின் உதவியுடனேயே அமைக்கப்பட்டது.

இந்தப் படைப்பிரிவின் பாதுகாப்புக் கட்டமைப்பிலிருந்து தமக்கு விலக்களிக்குமாறு நான்கு அமைச்சர்கள் கேட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விசேட அதிரடிப்படையின் பாதுகாப்பைக் கொண்டுள்ள உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க, பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன, அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகியோர் தமக்குத் தொடர்ந்தும் விசேட அதிரடிப் படையின் பாதுகாப்பு வழங்கப்படவேண்டும் என விரும்புவதாகவும்,

விமானப்படையினரைத் தற்காப்புக்காக வைத்துள்ள அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் - அப்பாதுகாப்பை விலக்குவதை விரும்பவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் தொடர்ந்தும் இராணுவக் கொமாண்டோக்களின் பாதுகாப்பையே வைத்துள்ளார்.

கடந்த வாரம்முதல் முக்கிய பிரமுகர்களுக்கான பாதுகாப்புப் படைப்பிரிவு செயற்படத் தொடங்கியுள்ள போதும், மேற்படி ஐந்து பேரும் தமது முன்னைய பாதுகாப்புப் படையினரையே வைத்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# நல்லூர் கோட்டப் பாடசாலைகளின் மகளிர் தினப்போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

மகளிர் தினத்தை முன்னிட்டு நல்லூர் கோட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடாத்தப்பட்ட கட்டுரை, கவிதைப் போட்டிகளின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

கட்டுரைப்போட்டியில், 1 ஆம் இடம் - தி.பிரியதர்சினி (யாழ்.செங்குந்தா இந்துக் கல்லூரி), 2 ஆம் இடம் - தி.ரேகா ( நல்லூர் ஸ்தான சி.சி.த.க. பாடசாலை), 3 ஆம் இடம்- பா.சுபாஜினி (கொக்குவில் இராமகிருஷ்ணா ம.வித்தியாலயம்) ஆகியோரும்,

கவிதைப் போட்டியில், 1 ஆம் இடம்- செ.நவரூபா (பெரியபுலம் மகாவித்தியாலயம்), 2 ஆம் இடம்- ந.சிந்துஜா (நல்லூர் ஸ்தான சி.சி.த.க. பாடசாலை), 3 ஆம் இடம்- ச.தர்சன் (யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரும் பெற்றுள்ளனர் என நல்லூர் கோட்ட உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி. ச.காங்கேயன் அறிவித்துள்ளார்.

# சாவகச்சேரியில் மீண்டும் நீதிமன்றம் வழக்குகள் துரிதமாக விசாரணை

(சரசாலை)

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்ற நீதிவானாக க.அரியநாயகம் நியமிக்கப்பட்டதை அடுத்து, தென்மராட்சிப் பிரதேச வழக்கு விசாரணைகள் யாவும் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

கடந்தசில ஆண்டுகளாகப் பருத்தித்துறையில் இயங்கிவந்த நீதிமன்றம்- மீண்டும் சாவகச்சேரியில் இயங்க ஆரம்பித்துள்ளது. இதனால், தென்மராட்சி மக்கள் பலர் தமது வழக்குகளை இந்நீதிமன்றத்தில் பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(34)

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

வண்ணை ஸ்ரீ வைத்திலிங்கம் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை பி.ப. 1.30 மணிக்கு வித்தியாலய அதிபர் கதிர் செல்வநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் முதன்மை விருந்தியராக நல்லூர் கல்விக்கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி. ச.காங்கேயன் கலந்துகொள்ளவுள்ளார்.




நமது ஈழநாடு வழங்கும்




உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003

MEGA பரிசுப் போட்டி

முதற்பரிசு - 25,000

வழங்குவோர்: இரத்தினம்ஸ்
(இரத்தின கோல்ஸ்ஸின் இணைந்த நிறுவனம்)
30, சிறாம்பியடி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
அசோசியேட்டட் மோட்டார் வெய்ஸ்ஸின் (AMW) அங்கீகரிக்கப்பட்ட யமஃகா, மோட்டார் சைக்கிள்கள், வெளி இணைப்பு இயந்திரங்களின் யாழ்ப்பாண விற்பனை முகவர்.

இரண்டாம் பரிசு - 15,000

வழங்குவோர்:
1. ஜொனெக்ஸ் மல்ரி பலஸ்
YONEX MULTI PALACE
விளையாட்டு உபகரண விற்பனையாளர்கள்.
76, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்



2. சமுத்திரா ரேட்ஸ் (லிமிட்டட்)
டீசல் என்ஜின், நெல் குற்றும், மா அரைக்கும் இயந்திரங்கள், உதிரிப்பாக விற்பனையாளர்கள்.
3/2 ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்

மூன்றாம் பரிசு - 10,000

வழங்குவோர்: சந்தியா மல்ரிகோட்யாட்
531, பருத்தித்துறை வீதி, நல்லூர். பிரதான வீதி, பண்டத்தரிப்பு.
Fancy goods, gift items, fevicryl & acron paint items.

இன்னும் ஏராளமான ஆறுதல் பரிசுகள்!
வினாக்கொத்துக்கு விடை தந்து பரிசுகளை அள்ளிச் செல்லுங்கள்!!

உலகக் கிண்ண கிரிக்கெட் - 2003

வெல்லுங்கள்...! அள்ளுங்கள்...!

உலகக் கிண்ணக் கிரிக்கெட் பற்றிய வினாக்களுக்கு விடை தந்து பணப்பரிசுகளை, வெகுமதிகளை உங்களதாக்குங்கள்.

1. உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி 1975 இல் முதன் முதலாக எந்த நாட்டில் நடைபெற்றது? (....................)
2. இரண்டு முறை தொடர்ச்சியாக உலகக் கிண்ணத்தை வென்று மூன்றாவது முறையாக வெல்லும் வாய்ப்பை இழந்த அணி எது? (....................)
3. 2003 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டிகள் எந்தெந்த நாடுகளில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன? (....................)
4. 2003 உலகக் கிண்ணப் போட்டிகளில் ஆட்டத்தொடர் நாயகனாக (MAN OF THE SERIES) விளங்கப்போகும் வீரன் யார்? (....................)
5. 2003 உலகக் கிண்ணத்தை வெற்றி கொள்ளப்போகும் அணி யாது? (....................)

பூர்த்தி செய்துவிட்டீர்களா...? இது போன்ற ஐந்து கூப்பன்களை ஒரே வகையில் பூர்த்தி செய்து, இன்றிரவுக்கு முன்பாக -

'உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003'
நமது ஈழநாடு,
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு நேரில் அனுப்பி வையுங்கள்.

பெயர்: --------------------
வயது: --------------------
முகவரி: --------------------

சரியான விடைகளை எழுதுபவர்களிலிருந்து அதிர்ஷ்டசாலிகள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

போட்டி முடிவுகள் மார்ச் 28 ஆம் திகதியன்று 'நமது ஈழநாடு' பத்திரிகையில் வெளியாகும்.

# போசனையிலும் உடல்நலத்திலும் மீனின் பங்களிப்பு




**சென்றவாரத் தொடர்ச்சி...**

கண்ணின் பின்னால் காணப்படும் கூழ் நிலைப்பொருளில் அதிகளவு (**cyano-cobalamin** (விற்றமின் B12) தயமின் டொக்கோ-சுகெக்ஸ் சோனிக் அமிலம் (**DHA**) என்பன காணப்படுகின்றன.

மீனென்புகளில் அதிகளவில் கனியுப்புக்களும், கொலாஜின் கொண்ட தொடுப்பிழையங்களும் காணப்படும்.

தோற் கீழாகக் காணப்படும் கொழுப்பில் அதிகளவு நிரம்பாத கொழுப்பமிலங்கள் (**DHA**), அயிக்கோசா பென்டியோனிக் அமிலம் (**EPA**) என்பன காணப்படுகின்றன.

தசைச்சுற்றிழையத்தில் அதிகளவு 'கல்சியம்' காணப்படுகிறது.

செந்நிறத் தசை இழையத்தில் விற்றமின் கூறுகளான ரெட்டினோல் (Retinol), தயமின் (Thaiamin), றைபோபிளேவின் (Riboflavin) கோலியோ கல்சி பெரோல் (Choles calciforol), சயனோ கோபாலமின் (cyano cobalamin) என்பன அதிகளவில் காணப்படுகின்றன.

கசியிழையங்கள் அதிகளவில் கொட்திரின் என்னும் புரதத்தைக் கொண்டுள்ளன. மீன் எண்ணெயில் அதிகளவில் bha (doxcosahexne noic acid) விற்றமின் D3 என்பவற்றைக் கொண்டுள்ளது.

(seafdec, 1993)

மீன் எண்ணெயில் காணப்படும் நீண்ட காபன் சங்கிலியுடைய ஒமேகா- 3 நிரம்பாத பல்பகுதியக் கொழுப்பமிலம் மனித ஆரோக்கி





மீனின் தோலில் அதிகளவு ரெட்டினோல் (**Retinol**), தயமின் (**Thiamine**) றைபோபிளேவின் (**Riboflavin**) என்பன காணப்படுகின்றன.

மேற்படி விற்றமின்கள் மீனின் தசைப் பகுதியைவிட, அதன் தோலிலேயே அதிகளவில் காணப்படுகின்றது. கறுப்பு நிறமுடைய மீன்தோலில் குறிப்பிடத்தக்க அளவில் றைபோபிளேவின் (Rivoflavin) காணப்படுகின்றது.

கொலோ, கால்சிபைட் (chole calcified) (vitamin D3) ரெட்டினோல் (Ritinol), நியாசின் (Niacin), கல்சியம் என்பன மீன் குடலில் அதிகளவு காணப்படுகின்றன.

வெண்தசை இழையத்தில் லைசின் அமினோ அமிலங்கள் என்பவற்றை அதிகளவு கொண்ட புரதங்களும் கொழுப்புக்களான Epa, DHA என்பனவும் அதிகளவில் காணப்படுகின்றன.

யத்திற்குப் பெரிதும் உதவுகின்றது.

இவை முடியுரு குருதி அடைப்பு நோய் (coronary heart disease), உயர் குருதி அமுக்கம் (hyper tension) என்பவை ஏற்படுவதை தடுப்பதோடு- மனித முழையத்தில் மூளை வளர்ச்சியைத் துரிதப்படுத்துகின்றது. அத்துடன் மனிதனில் ஏற்படும் மூட்டுவாதம் (Rheumatoid arthritis), ஆஸ்மா என்பவற்றின் அறிகுறிகளையும் மனித உணவிலும் அதி தீவிர வளர்ப்பில் வளர்க்கப்படும் விலங்குகள் என்பவற்றின் பல்பகுதியக் கொழுப்பமிலங்களில் சமநிலைக் குழப்பம் ஏற்படலாம்.

மனிதனில் ஒமேகா-6 இற்கும் ஒமேகா-3 இற்கும் -3 நிரம்பாத பல்பகுதியக் கொழுப்பமிலங்களிற்கும் இடையிலான விகிதம் 5:1 ஆகும். ஆனால், உணவிலேற்படும் ஒமேகா-3 நிரம்பாத பல்பகுதியக் கொழுப்பமிலத்தின் குறைபாட்டால் இவற்றின் விகிதம் 10:1ஆக அதிகரிக்கும்.

மனித உணவில் ஒமேகா-3 நிரம்பாத பல்பகுதியக் கொழுப்பமிலங்களான Eicosapencaenoic acid (epa) docosheah exaeonic-acid) என்பவற்றை அதிகரிப்பதற்கான மீன் உணவுகள், மீன் எண்ணெய் என்பவற்றை பண்ணை விலங்குகளின் உணவில் அதிகளவில் சேர்த்து, பின் அவற்றிலிருந்து பெறப்படும் இறைச்சி, பால், முட்டை என்பவற்றை உண்பதன்மூலம் மேற்குறிப்பிட்ட அசாதாரண நிலைகளில் இருந்து விடுதலை அடையலாம் என லண்டனில் இயங்கும் சர்வதேச மீன் உணவு, மீன் எண்ணெய் உற்பத்தியாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

மீன் முட்டைகளில்- புரதம், விற்றமின்கள், கனியுப்புக்கள் என்பவற்றுடன் DHA என்பன செறிந்து காணப்படும்.

மீன் போசணைக்கூறுகளின் விளைவுகள் பற்றி ஜப்பானிய விஞ்ஞானியான இசுமி, அதிகளவு கொழுப்பு நிறைந்த மீன் உணவை உண்ணும் எஸ்கிமோவர்களின் நாடி, குருதி என்பவற்றில் அதிகளவு கொழுப்பமிலங்கள் படிந்து காணப்படவேண்டும். ஆனால், அவர்கள் உண்ணும் மீன்களில் உயர் செறிவு காணப்படும் கொலஸ்திரோலைக் குறைக்கும் DHA, EPA என்பவற்றின் தொழிற்பாட்டால் அவர்களின் குருதி நாடியில் கொழுப்புப் படிவுகள் காணப்படாதுள்ளன எனக் குறிப்பிட்டுள்ளார். மீனில் காணப்படும் DHA ஆனது மனித மூளையின் வளர்ச்சிக்கும் விருத்திக்கும் அவசியமானதாகும்.

நோர்வே 'நாட்டு விஞ்ஞானிகளின் ஆய்வு கூடப் பரிசோதனைகளில்இருந்து மீனின் கொழுப்பானது புற்றுநோய்க்கெதிராகச் செயறபடுவதுடன், செறிந்த மீன் கொழுப்பானது எக்ஸிமா போன்ற தோல் வியாதிகளையும் குணப்படுத்தும் இயல்புள்ளது என்று தெரியவந்துள்ளது.

ஸ்பானிய நாட்டு ஆய்வாளர்கள், ஒழுங்காக உண்ணப்படும் மீன் உணவானது ஆஸ்மா ஏற்படுவதைத் தடுப்பதில் உதவுவதாக குறிப்பிட்டுள்ளார்கள். மலேசிய விஞ்ஞான பல்கலைக்கழகத்தினர், கடலட்டையின் Holo thuria atoa எனப்படும் ஒரு புதிய இனம்- வட்டப்புழுக்கள், பங்கசு தொற்று போன்றவற்றுக்குச் சிகிச்சை அளிப்பதற்காகப் பாவிக்கப்படுவதுடன் அவை அழுகல் எதிரியாகவும் பாவிக்கப்படலாம் எனக் குறிப்பிட்டுள்ளனர்.

ஐக்கியராச்சிய விஞ்ஞானிகள்- மீன் இனங்களான கெரங்ஸ் (herrings), மக்கரல் (mackeral), சல்மோன் (salmon), நெத்தலின் (sprats) போன்றவற்றை அதிகளவு உணவில் சேர்ப்பின், அவை எமது மனநிலையைச் சாந்தப்படுத்தும் சாத்தியக்கூறுகள் உள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

**கலாநிதி**
**கா.சித்திரவடிவேல்**

ரைக்கிளிசரைட் (Triglyceride) எனப்படும் ஓர் கொழுப்புணவு, அதிகளவில் குருதியில் சேரின், அது அவர்களை மற்றவர்களில் பகைமையுறும் இயல்புள்ளவர்களாக்கும். இந்த இயல்பை மீனில் காணப்படும் நிரம்பாத ஒமேகா -3 பல்பகுதிய கொழுப்பமிலமானது குறைக்கின்றது என்பதை மீன் உணவுகளில் மேற்கொண்ட ஓர் ஆய்வு குறிப்பிடுகிறது. (SEAFDEC, 1993).

அத்துடன் ஐக்கிய அமெரிக்காவில் மேற்கொள்ளப்பட்ட இன்னொரு ஆய்வில் அதிகளவு மீன் நுகர்வுள்ள நாட்டு மக்கள் குறைந்த வீதத்திலேயே மன அழுத்தங்களுக்கு உள்ளாகின்றார்கள் எனக் காட்டப்பட்டுள்ளது. ★

# நுகர்வோரைப் பாதுகாக்க ஒரு அதிகாரசபை



நுகர்வோரின் உயிருக்கும் சொத்திற்கும் தீங்குவிளைவிப்பதான பொருட்களை- சந்தைப் படுத்துவதற்கு எதிராக அல்லது சேவைகளை வழங்குவதற்கு எதிராகப் பாவனையாளர்களைப் பாதுகாப்பதறாகாகப் 'பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை' உருவாகியுள்ளது. நியாயமற்ற வியாபாரப் பழக்கவழக்கங்களுக்கெதிராகப் பாவனையாளர்களைப் பாதுகாத்தலும், பாவனையாளர் நலனுக்கு போதியளவு கவனஞ்செலுத்தப்படுமென உத்தரவாதமளித்தலும் இவ்வதிகார சபையின் மற்றுமோர் குறிக்கோளாகும்.

இலங்கையில் வர்த்தகர்களின் சுரண்டல்களில் இருந்து நுகர்வோரைப் பாதுகாக்கவும் வர்த்தகத்துறையை மேம்படுத்தும் நோக்கிலும் உருவாக்கப்பட்டுள்ள இந்த 2002 ஆம் ஆண்டு பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டம், பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில், இன்னும் சில நாட்களில் இவ்வதிகாரசபை நிறுவப்படும் கட்டத்தில் உள்ளது.

இவ்வதிகாரசபை தன்னகத்தே கொண்டுள்ள மேலும் இரு குறிக்கோள்கள் ஆவன - நுகர்வோர் நியாயமான விலைகளில் பொருட்கள் சேவைகளைப் போதியளவு பெற்றுக்கொள்வதனை உறுதிப்படுத்தலும், நியாயமற்ற வியாபாரப் பழக்கங்கள், மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரப் பழக்கங்கள் அல்லது வேறுவகைப்பட்ட வழிகளில் வியாபாரிகளால் நுகர்வோர் சுரண்டப்படுதல் என்பவற்றுக்கு எதிராக நிவாரணம் தேடுதல் என்பனவாகும்.

இப்புதிய அதிகாரசபையானது- நியாய வியாபார ஆணைக்குழு மற்றும் உள்நாட்டு வியாபாரத்திணைக்களம் ஆகியவகைகளின் ஒரு கூட்டாகக் காணப்படும். இவ்வதிகாரசபை, தலைவர் ஒருவர் உட்பட 10 பேரால் நிர்வகிக்கப்படும். இவ் அதிகாரசபையின் குறிக்கோளாவன.

1. தொழில் பொறுப்பு முயற்சிகளிடையே மட்டுப்படுத்தும் வியாபார உடன்படிக்கைகளைக் கட்டுப்படுத்தல்.

2. விலைகள் தொடர்பில் தொழிற் பொ்றுப்பு முயற்சிகளிடையேயான உடன்பாட்டொழுங்குகளை கட்டுப்படுத்தல்.

3. சந்தையினுள் அல்லது சந்தையின் கணிசமான பகுதியில் உள்நாட்டு வியாபாரம் அல்லது பொருளாதார அபிவிருத்தி தொடர்பில் ஆதிக்க நிலையை, துஷ்பிரயோகம் செய்தலை கட்டுப்படுத்தல்.

4. உள்நாட்டு அல்லது சர்வதேச வியாபாரத்தை அல்லது பொருளாதார அபிவிருத்தியைப் பங்கமாகப் பாதிக்கின்ற போட்டி மீதான ஏதேனும் மட்டுப்பாட்டைக் கட்டுப்படுத்தல்.

அந்தவகையில் வினைத் திறமையான போட்டியையும் நுகர்வோர் பாதுகாப்பையும் முன்னேற்றுவதற்கும், உள்நாட்டு வியாபாரத்தை ஒழுங்குபடுத்துவதற்குமாக உருவாகும் இவ்வதிகாரசபை, இந்நாட்டு வியாபார மற்றும் நுகர்வுத்துறைகளில் புதிய பரிமாணங்களை உருவாக்கும் என்று புத்திஜீவிகள் நம்பிக்கை தெரிவிக்கின்றனர்.

# குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | சாவகச்சேரி | மருதனார்மடம் | ஊர்காவற்றுறை | சுன்னாகம் | நெல்லியடி | யாழ்ப்பாணம் | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|---|---|
| பயிற்றை | 30/- | 40/- | 40/- | 30/- | 40/- | 45/- | 40/- |
| உருளைக்கிழங்கு | 70/- | 70/- | 70/- | 60/- | 60/- | 70/- | 70/- |
| கத்தரிக்காய் | 60/- | 50/- | 60/- | 60/- | 60/- | 60/- | 20/- |
| பாகற்காய் | 40/- | 25/- | 40/- | 40/- | 60/- | 40/- | 40/- |
| வெண்டிக்காய் | ● | 20/- | 20/- | 20/- | 40/- | 30/- | 20/- |
| கரட் | 60/- | 40/- | 60/- | 50/- | 60/- | 60/- | 50/- |
| பீற்றூட் | 40/- | 30/- | 30/- | 25/- | 40/- | 40/- | 30/- |
| வெங்காயம் | 20/- | 20/- | 20/- | 20/- | 25/. | 25/- | 20/- |
| பச்சைமிளகாய் | 40/- | 40/- | 40/- | 50/- | 60/- | 50/- | 35/- |

# இங்கு சூழலைப் பாதுகாக்க

*தமிழகத்திலிருந்து சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காகத் தீவிரமாகச் செயற்படும் 'சூழலியற் போராளி' நெடுஞ்செழியன், 'நமது ஈழநாடு' பத்திரிகைக் காரியாலயத்திற்கு வருகை தந்திருந்தார். அவருடனான நேர்காணல் இங்கு பிரசுரமாகின்றது.*

கேள்வி: நீங்கள் சூழலியல் தொடர்பான வேலைத்திட்டங்களை முன்னெடுக்கும் சூழலியற் போராளியாக எவ்வாறு உருவாகினீர்கள்?



**நெடுஞ்செழியன்**

பதில்:- சூழலியல் என்பது தனிப்பட்ட ஒரு தத்துவார்த்தமாகப் பார்க்கவேண்டிய



தேவையில்லை. ஒவ்வொரு மனிதனும், அவனது வாழ்வியற் சூழலும், அது எதிர்நோக்கும் நெருக்கடிகளுமே "சூழலியம்" என்று கூறமுடியும். சூழலியம் என்பது அரசியல், பொருளாதார, சமூக, கலாசார பரிமாணங்களைத் தன்னகத்தே கொண்ட பன்முகத்துறையாகக் காணப்படுகிறது.

இந்தவகையிலே நான் வாழ்ந்த சூழல், நான் எதிர்கொண்டமுறையில் சூழலியல் தொடர்பான அக்கறைகளை நிலைநிறுத்தி வேலை செய்யத் தூண்டியது.

அத்துடன், எனது தந்தையார் ஆய்வு கூடப் பரிசோதகராகத் தமிழகத்தின் பல பாகங்களிலும் கடமையாற்றியதால், தமிழகதின் பல பாகங்களுடனும் எனக்குச் சிறு வயது முதல் பரிச்சயமாகக்கூடிய வாய்ப்புக்களைத் தோற்றுவித்தது எனலாம். இதன பிரகாரம் தமிழகத்தின் பல பகுதிகளினதும்

# இயற்கை வேளாண்மை வேண்டும்!

வாழ்வியற் கோலங்களை, வாழ்க்கை மாதிரிகளை, அந்தந்தப் பகுதிக்கேயுரித்தான உயிர்வாழ்வினைப் புரிந்து கொள்ளக்கூடிய சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன.

கேள்வி:- நீங்களும், உங்களுடன் கருத்தொருமைப்பாடுடைய நண்பர்கள் சிலரும் சேர்ந்து சூழலியம் தொடர்பான வேலைத் திட்டங்களை "பூவுலகின் நண்பர்கள்" என்ற நண்பர்கள் வட்டத்தினை உருவாக்கி, செயற்படுகிறீர்கள். அந்தவகையில் பூவுலகின் நண்பர்கள் என்ற அமைப்புப் பற்றி?

பதில்:- நானும் சில சூழலியல் அக்கறையுடைய நண்பர்களும் இணைந்து 'பூவுலகின் நண்பர்கள்' என்ற அமைப்பினை உருவாக்கினோம். எமது நண்பர்கள் வட்டம் சென்னை, புதுச்சேரி, கோயம்புத்தூர், மதுரை - போன்ற இடங்களில் இருக்கிறது. சூழலியல் தொடர்பான அக்கறையினை மக்கள் மத்தியிலே ஏற்படுத்துவதுதான் எமது அமைப்புடைய பிரதான நோக்கமாக இருக்கிறது.

இந்தவகையில் சென்னையில்- இருக்கின்ற நாம், சூழலியல் தொடர்பான கட்டுரைகளையும், புத்தகங்களை எழுதி வெளியிடுவதுடன், வேறு நாடுகளில் சூழலியம், உலகமயமாதல், மூன்றாம் மண்டல நாடுகளின் அரசியல் போன்ற விடயங்களையும் மொழிபெயர்த்து வெளியிடுகின்றோம்.

கோயம்புத்தூரில் இருக்கும் நண்பர்கள் வீதி நாடகங்கள் மூலம் சூழலியற் கருத்துக்களைப் பரப்பிவருகின்றனர். அதுபோல, புதுச்சேரியிலிருக்கும் நண்பர்கள் "சூழலியம்" என்ற மாத சஞ்சிகையை வெளியிட்டு வருகின்றார்கள்.

மேலும், மக்கள் மத்தியில் அவர்கள் எதிர்நோக்கும் சூழலியற் பிரச்சினைகளை விளங்கிக் கொள்வதற்கு உதவுவதுடன், வர்த்தக நோக்குடனும், இலாபம் உழைக்கும் நோக்குடனும் செயற்படும் வர்த்தகக் கம்பனிகளது செயற்கை மற்றும் இரசாயனப் பொருட்களைக் கொள்வனவு செய்வதனையிட்டு ஏற்படும் ஆபத்துக்களைப் பற்றி விழிப்புணர்வுகளை ஏற்படுத்திவருகிறோம். தொழிற்சாலைகளின் கழிவுகள் பற்றியும், தொழிற்சாலை அமைவிடத்திலுள்ள சூழல் மாசுபடுதல் போன்ற விடயங்களில் கூடுதல் அக்கறை செலுத்திவருகிறோம்.

இந்தவகையில், இறால் வளர்ப்புத் தொழிற்சாலையுள்ள இடங்களின் சூழல் மாசுபடுதல் பற்றி அப்பிரதேச மக்களுக்கு எடுத்துக் கூறுவதுடன், அவர்கள் தமக்கு ஏற்படும் சூழற்பாதிப்புத் தொடர்பாக இந்திய உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்வதற்கும் உதவிகள் செய்துவருகின்றோம்.

கேள்வி:- இவ்வாறான செயற்திட்டத்தில் நீங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், சவால்கள் பற்றிக் கூறமுடியுமா?

பதில்:- குறிப்பாகத் தொழிற்சாலைகளில் ஏற்படும் சூழல் மாசுபடுதல் பற்றி மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தும்போது, தொழிற்சாலைத் தொழிலதிபர்களின் எதிர்ப்புக்கும், அச்சுறுத்தலுக்கும் நிறையவே முகங்கொடுக்க வேண்டியுள்ளது. அது சிலவேளை வெறும் போராட்டமாகவே காணப்படும்.

கேள்வி:- கொழும்பிலிருந்து ஏ-9 பாதையூடாகவே யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்துள்ளீர்கள். அந்தவகையில் எமது பகுதியின் சுற்றுச்சூழல் பாதிப்புக்கள் பற்றி நீங்கள் நேரிலேயே அவதானித்திருப்பீர்கள். அதுபற்றி உங்கள் கருத்து யாது?

பதில்:- நான் முன்பு இரு தடவைகள் இலங்கைக்கு வந்தபோதும், யாழ்ப்பாணம் வர வேண்டும் என்று முயற்சித்தபோது சந்தர்ப்பங்கள் கிடைக்கவில்லை. இம்முறை அந்தச் சந்தர்ப்பம் கிடைத்தது. ஏ-9 நெடுஞ்சாலை வழியே வரும்போது, யுத்தப் பிரதேசங்களைக் கடந்துவந்தேன். எண்சாண் உடம்பிற்கு தலையே பிரதானம் என்பார்கள். ஆனால், தலையில்லாத தென்னைகளை நிறையவே காணக்கூடியதாக இருந்தது. அடுத்து பயிர் பண்ணக்கூடிய இடங்கள் மற்றும் வீதியோரங்கள் முழுவதும் கண்ணிவெடி அபாயங்கள் பற்றிய எச்சரிக்கைப் பலகைகள் தொங்கவிடப்பட்டுள்ளன. கண்ணிவெடிகளால் பெருஞ் சுற்றுச்சூழற்பாதிப்பு ஏற்பட்டிருப்பதைக் காணமுடிந்தது. தற்பொழுது மேற்கொள்ளப்படும் புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகளின்போது சூழலியலைப் புனரமைப்பதற்கு அதிகளவு அக்கறை செலுத்த வேண்டும்.

அடுத்து, யாழ். நகரை நான் சுற்றிப் பார்த்தபோது, வேதியப் பொருட்களின் பாவனை அதிகமாக இருப்பதை அவதானித்தேன். பிளாஸ்ரிக் கதிரைகள் விற்பனைக்கு வந்துள்ளன. பொலித்தீன் பை பாவனை அதிகமுள்ளது. உணவுப் பார்சல்களில் பொலித்தீன் பேப்பரில் சுற்றிய உணவுப் பண்டங்கள் நிச்சயம் இரசாயனத் தாக் கங்களை ஏற்படுத்தும். இவை பற்றிய விழிப்புணர்வு மிக அவசியமாக மக்கள் மத்தியில் பரப்பப்படவேண்டும்.



கேள்வி:- நீண்ட யுத்தத்தின் பின் தற்பொழுதுள்ள சமாதானச் சூழ்நிலையில் புனர்வாழ்வுத் திட்டங்களில் சூழலியல் தொடர்பான விடயங்களை எவ்வாறு கையாள வேண்டுமெனக் கருதுகிறீர்கள்.

பதில்:- இந்தக் கேள்விக்கு நான் கூறக்கூடியது யாதெனில், கைத்தொழில்கள் என்னும்போது- 'தூய கைத்தொழில்' (Clean Technology) என்ற வகையில் சூழற்பாதிப்புக்கள் எவையும் ஏற்படாதவண்ணம் கைத்தொழிற்கான திட்டங்கள் மேற்கொள்ள வேண்டும். விவசாயத்தினைப் பொறுத்தவரையில், இயற்கை வேளாண்மைக்கு முன்னுரிமையான திட்டங்களை வழங்கவேண்டும். இதற்கு கியூபா முன்மாதிரியாக காணப்படுகிறது. அடுத்து தற்சார்புப் பொருளாதாரத்தைப் பாதுகாக்கக்கூடியதாகவும், வளர்க்கக்கூடியதுமான திட்டங்களைப் புனர்வாழ்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப் படவேண்டும்.

கேள்வி:- தற்சார்புப் பொருளாதாரம் என்று கூறுகிறீர்கள், இன்றைய உலகமயமாதல் போக்கில் தற்சார்புப் பொருளாதாரத்தினைப் பேணக்கூடிய சாத்தியக் கூறுகள் தென்படுகிறதா?

இன்றைய உலகமயமாதல் போக்கில் தற்சார்பு என்பது கட்டாயம் மூன்றாம் மண்டல நாடுகள் பேணவேண்டிய ஒன்றாகும். உலகமயமாதலினால் மேற்கு நாடுகளின் சந்தைகளாக மூன்றாம் மண்டல நாடுகள் காணப்படுகின்றதே தவிர, மூன்றாம் மண்டல நாடுகளின் சந்தையாக மேற்குநாடுகள் என்றைக்கும் இருக்கவில்லை, இருக்கப்போவதுமில்லை. எனவே, உலகமயமாதல் போக்கினை எம்மைப் போன்ற மூன்றாம் மண்டல நாடுகள் தெளிவாக விளங்கிக் கொள்ளவேண்டும். இதுபற்றிய விழிப்புணர்வு மக்கள் மத்தியில் ஏற்படுத்துவது மிகவும் அவசியமானதாகும்.

**நேர்காணல்**
**கணேஷ், அநபாயன்**


# தொழில் வங்கி



| நிறுவனம்:- | கிழக்குப் பல்கலைக்கழகம் | ஜனசக்தி காப்புறுதி நிறுவனம் | தனியார் நிறுவனம் காசில்லேன் கொழும்பு -04 |
|---|---|---|---|
| வெற்றிடமாக உள்ள பதவிகள்:- | தற்காலிக உதவி விரிவுரையாளர் | பிரதேச பிரதிநிதிகள் | சிவில் பொறியியலாளர், பொறியியல் உதவியாளர்,வேலை மேற்பார்வையாளர், தர மேற்பார்வையாளர், எழுதுவினைஞர் |
| அடிப்படைத் தகுதி:- | B.S.C .Chemistry (Hons) | க.பொ.த. சாதாரணதரம் | தேவையான சான்றிதழ்களும், முன்னனுபவமும். |
| விண்ணப்ப முடிவு திகதி | 14-03-2003 | 16.03.2003 | 16.03.2003 |

தொழில் வங்கியில் வரும் விடயங்கள் தொடர்பான மேலதிக தகவல்களைப் பெற விரும்புவோர்-
" நமது ஈழநாடு"
அலுவலகத்தில் நேரில் வந்து பார்வையிடலாம்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**
சோழியன் குடுமி சும்மா ஆடாது.
- தமிழ்ப்பழமொழி.

# நமது நோக்கு

## ஊடுருவலுக்குப் பின்னால்...!

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து, மீன்பிடியில் ஈடுபட்டுவரும் இந்திய மீனவர்களின் விவகாரம் - பேசாலைச் சம்பவத்தைத் தொடர்ந்து சூடுபிடித்துவருகிறது.

நேற்றுமுன்தினம் இரண்டாவது நாளாகவும் இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறிய இந்திய மீனவர்களில் 105 பேர் - அவர்களது ட்ரோலர்களுடன் - உள்ளூர் மீனவர்களால் சுற்றி வளைக்கப்பட்டுப் பிடிக்கப்பட்டனர்.

குறிப்பிட்ட இரண்டு தினங்களிலும் நடைபெற்றுள்ள இந்த அத்துமீறல்களை வைத்துப்பார்க்கும்போது - இந்திய மீனவர்களின் அடாவடித்தனமும், அத்துமீறலும் ஒருபுறமிருக்க - இவர்களை ஊக்குவித்து - எரிகிற தீயில் எண்ணெய் ஊற்றிவிட்டுக் குளிர்காய விரும்புபவர்களின் போக்குப் பற்றியும் கவனிக்க வேண்டியதாகின்றது.

இலங்கைக் கடற்பரப்புக்குள் இந்திய மீனவர்களின் அத்துமீறலென்பது இன்று நேற்று நடைபெறும் விடயமல்ல. பல ஆண்டுகளாகவே தொடரும் இந்த வரைமுறை மீறல் - பல சந்தர்ப்பங்களிலும் நேருக்குநேரான மோதல்வரை கொண்டு சென்றிருக்கின்றது. குறிப்பாகக் கச்சதீவுப் பகுதியில் நடைபெற்ற மோதல்கள், கைகலப்புக்கள் தொடர்பாக வடக்கு மற்றும் வடமேற்கு கடற்கரையோரப் பிரதேசங்களில் வாழும் மக்களின் அனுபவக் கதைகள் ஏராளமே.

இவை ஒருபுறம் நடந்துகொண்டிருந்தாலும் - தமிழகத்திலுள்ள தமிழர்களுக்கும், ஈழத்தமிழர்களுக்குமான உறவென்பது பாதிக்கப்படாததொன்றாகவே இருந்துவந்தது.

இங்கு அரசபயங்கரவாதம் தலைவிரித்தாடும் காலங்களிலும், இராணுவ நடவடிக்கைகள் தீவிரம்பெறும்போதும் - தமிழகத்திற்கு ஈழத்தமிழர்கள் அகதிகளாகச் சென்றது அங்குள்ள மக்கள் ஈழத்தமிழர்களுக்கும் விடுதலைப்போராட்டத்திற்கும் அனுதாபமும், ஆதரவும் தந்ததும் வெளிப்படையானது.

இத்தகைய நிலை காலப்போக்கில் தணிந்துகொண்டாலும்- நீறுபூத்த நெருப்பாகவே - ஈழத்தமிழர்களுக்கும், விடுதலைப் போராட்டத்திற்குமான ஆதரவுத்தளம் தமிழகமெங்கும் இன்றும் பரவிக்கிடக்கக் காணப்படுகின்றது.

இவ்வாறாதானதொரு சூழலில் - இதுவரைகாலமும் இலங்கைக் கடற்படையினரோ ஈழத்தமிழர்களுக்குச் செய்த கொடுமைகளுக்கும் அழிவுகளுக்கும் குறைவில்லாத வகையிலேயே- தமிழக மீனவர்களையும் துன்புறுத்திவந்தனர். பல சந்தர்ப்பங்களில் படுகொலைகளும் நடந்தேறின.

இலங்கைக் கடற்படை என்றாலே - இந்திய மீனவர்கள் மத்தியில் பெரும் அச்சமும் நிலவிவந்தது.

ஆனால், அண்மைய காலங்களில், குறிப்பாகப் போர்நிறுத்தத்திற்குப் பின்னர்- இலங்கைக் கடற்படையினர் தமது தந்திரோபாய நடவடிக்கையில் ஒன்றாக இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைவதையும் மீன்பிடித்துச் செல்வதையும் 'கண்டும் காணாமல்' விட்டுவிடும் போக்கைக் கடைப்பிடித்து வந்தனர்.

இவ்வாறு, இலங்கைக் கடற்பிராந்தியத்தினுள் - இந்திய மீனவர்கள் முன்னர் நுழைந்தபோதெல்லாம் - 'இலங்கையின் இறையாண்மைக்கான' அச்சுறுத்தலாகக் கருதி - அவர்களைச் சுட்டுத்தள்ளிய இலங்கைக் கடற்படையினர், தற்போது இவ்வாறு நடந்துகொண்டதன் பின்னணி மர்மத்துக்குரியதாகவே இருந்து வந்தது.

கடற்படையினரின் இந்தப் போக்கினால் - எல்லை தாண்ட வந்த இந்திய மீனவர்கள் - உள்ளூர் மீனவர்களின் படகுகளைத் தாக்கியும், வலைகளை அறுத்தும் அடாவடித்தனம் புரிந்ததோடு - கடல்வளத்தையும் இஷ்டத்துக்குக் கொள்ளையடித்துச் செல்ல முற்பட்டனர்.

இலங்கைக் கடற்படையினரின் மறைமுகமான ஊக்குவிப்பால் நடந்த இந்த நடவடிக்கைகள் - உள்ளூர் மீனவர்களிடம் நியாயமான கோபத்தினை ஏற்படுத்தின.

இதுவரைகாலமும் - போரினாலும், படைகளின் அச்சுறுத்தலாலும் - தமது சீவனோபாயத்திற்கான தேவையை நிவர்த்தி செய்யவே - பெரும் தடைகளுடனும், கெடுபிடிகளுடனும் போராடியே, கடற்தொழிலை மேற்கொண்டு வந்த உள்ளூர் மீனவர்களுக்கு - சமாதான காலத்திலும் தமது தொழிலைச் சீரழிக்க முனைந்த அத்துமீறலும், கொள்ளையிடலும் சினத்தையே ஏற்படுத்தின.

இதன் விளைவாகவே - பேசாலைக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்த இந்திய மீனவர்கள் பிடிக்கப்பட்டு - பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். இதன்போது ஏற்பட்ட கைகலப்புகள் பலரையும் படுகாயமடையவும் செய்தன.

உண்மையில் - இத்தகையதொரு நிலையை உருவாக்கிக் கொண்ட இலங்கைக் கடற்படையோ - இரு நாடுகளதும் தமிழ் மீனவர்களும் மோதிக்கொள்வதை வேடிக்கை பார்க்கவே செய்தது.

இதற்கு எவ்விதத்திலும் குறைவில்லாது இந்தியக் கடற்படையும், அந்நாட்டு கடலோரக்காவற்படையும் நடந்து கொண்டன. அவற்றுக்கும் இந்த ஊடுருவல்களால் ஆதாயம் இருக்கலாம் என்பது வேறு கதை.

மறுபுறத்தில் - தமிழகத்தில் 'பார்ப்பானிய மேலாதிக்கம்' கொண்ட ஊடகங்களும், கிடைத்தது சந்தர்ப்பம் என - இந்திய மீனவர்கள் கடத்தப்பட்டதாகவும், அவர்கள் மீது குண்டுகள் எறியப்பட்டதாகவும் - கதைகளைக் கட்டத் தொடங்கிவிட்டன.

'சும்மா கிடந்த வாய்க்கு மெல்வதற்கு அவல் கிடைத்தாற்போல' அவை நடந்துகொள்ளும் விதம் - தமிழகத்தில் தேவையற்ற பிரச்சினைகளை உருவாக்குவதோடு, ஈழத்தமிழர்கள் மீது விரோதத்தைத் தோற்றுவிக்க வேண்டுமென்ற அவற்றின் நோக்கத்தையே பகிரங்கமாக்குகின்றன.

இந்தவகையில் - இந்திய மீனவர்களின் ஊடுருவலின் பின்னணியிலுள்ள விடயங்கள் பற்றியும் மக்கள் விழிப்பாக இருப்பது அவசியமாகின்றது.

# தேசிய மின்விநியோக வலையமைப்பில் குடாநாட்டையும் இணைக்கத் திட்டம்

## 200 கோடி ரூபா தேவையாம்

இருநூறு கோடி ரூபா செலவில் குடாநாட்டுக்கான மின்விநியோகத்தைத் தேசிய மின்விநியோகமாக வலையமைப்புடன் இணைத்துக் கொள்வதற்கான திட்டங்கள் விரைவில் நடைமுறைப்படுத்தப்படும் என்று மின்சக்தி எரிபொருட்துறை அமைச்சர் கருஜெயசூரிய தெரிவித்தார்.

ஜேர்மனியின் உதவியுடன் மின்சக்தி எரிபொருட்துறை அமைச்சு இந்தத்திட்டத்தைச் செயற்படுத்தவுள்ளது. விரைவில் இந்தத் திட்டத்துக்கான நிதியுதவிகள் கிடைத்ததும் பணிகள் ஆரம்பிக்கப்படும்.

சுமார் இருநூறு கோடி ரூபா செலவில் மேற்கொள்ளப்படவுள்ள இந்தத்திட்டம், மூன்று வருடங்களில் பூர்த்தி செய்யப்படும்.

தற்போது குடாநாட்டில் 70 சதவீதமான பகுதிகளுக்கே மின்சார விநியோகம் இடம்பெற்று வருகின்றது. தேசிய மின்சார வலையமைப்பு வவுனியா வரையுமே செயற்பட்டு வருகின்றது. குடாநாட்டில் ஜெனரேற்றர்கள் மூலமே மின்விநியோகம் இடம்பெற்று வருகின்றது.

தேசிய வலையமைப்புடன் குடாநாட்டுக்கான மின்விநியோகம் இணைக்கப்பட்டால், நீர்மின்சார வசதிகளைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும் என்றும் அமைச்சர் கருஜெய சூரிய தெரிவித்தார்.

# கொரியாவிலிருந்து 10 ஆயிரம் கணினிகள்; பாடசாலைகளுக்கு வழங்குவதற்கு ஏற்பாடு

கொரிய அரசாங்கம் இந்தவருடம் பத்தாயிரம் கணினிகளை இலங்கைக்கு வழங்கவுள்ளதாகவும், இக்கணினிகள் பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்படும் என்றும் கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்தார்.

மாணவர்களுக்குக் கணினிக்கல்வியை வழங்குவதற்காகப் பாடசாலைகளுக்குக் கணினிகளை விநியோகிப்பதில் அரசாங்கம் கவனம்செலுத்தும் என்று தெரிவித்த அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு,

இலங்கையில் 92 சதவீதமானோர் கல்வியறிவுள்ளவர்களாக இருக்கின்றனர். இந்தியாவில் 40 சதவீமானோரே கல்வியறிவு பெற்றவர்களாக உள்ளபோதும் , இந்தியா தகவறதொழில்நுட்பத்தில் பெரிதும் முன்னேறியுள்ளது என்றும், இதனால் பாடசாலைகளில் தகவற்தொழில்நுட்பப் பாடத்தைப் போதிக்க அரசு நடவடிக்கை எடுக்கும் என்றும் தெரிவித்தார்.

மேலும், கடந்த காலங்களில் பாடசாலைகளுக்கான கணினிகளைக் கொள்வனவு செய்வதில் இடம்பெற்ற மோசடிகளில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும், சிலருக்கு இடமாற்றங்கள் வழங்கப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு மேலும் தெரிவித்தார்.

# கொழும்பில் மீண்டும் பொலிஸ் பதிவு; தகவல் திரட்டும் படிவங்கள் விநியோகம்!

(கொழும்பு)

கொழும்பு நகரில் தங்கியிருப்போரைப் பதிவுசெய்யும் நடவடிக்கைகளை மீளவும் ஆரம்பிக்குமாறு பாதுகாப்பு நடவடிக்கைக் கட்டளைப் பணியகம் உத்தரவிட்டிருப்பதாகத் தெரிய வருகின்றது.

கொழும்பில் நிரந்தரமாக வசிப்போர் மற்றும் தற்காலிகமாக வசிப்போரின் தகவல்களைத் திரட்டிக்கொள்ளவும், நகருக்கு வந்துசெல்வோர் பற்றிய தகவல்களைச் சேகரித்துக் கொள்ளவுமே மீண்டும் பொலிஸ் பதிவுகளை ஆரம்பிக்குமாறு கொழும்பிலுள்ள சகல பொலிஸ் நிலையங்களுக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது.

அத்துடன், நடவடிக்கைக் கட்டளைப் பணியகத்தினால் 'விபரங்களைக் கோரும் படிவம்' என்ற தகவல் திரட்டும் படிவங்களும் பொலிஸ் நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்தப் படிவங்கள் குடியிருப்பாளர்களுக்கு விநியோகிக்கப்படுவதாகவும், இது முழுதும் சிங்களமொழியிலேயே அச்சிடப்பட்டிருப்பதாகவும் தெரியவருகின்றது.

கடந்த காலங்களில் கொழும்பு நகரில் இருந்த பொலிஸ் பதிவு நடைமுறைகளால் தமிழ்மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கிளிநொச்சியில் 3 இடங்களில் மட்டும் ஆற்றுமணல் அகழ்வதற்கு அனுமதி!

## சூழல் பாதுகாப்புக்குழுக் கூட்டத்தில் முடிவு

(சரசாலை)

கிளிநொச்சி மாவட்டத்தில் மூன்று இடங்களில் மட்டுமே ஆற்றுமணல் அகழ்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. ஏனைய இடங்களில் ஆற்றுமணல் அகழ்வதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட அரசஅதிபர் பணிமனையில் நடைபெற்ற சூழல் பாதுகாப்புக்குழுக் கூட்டத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆற்றங்கரைகளில் இருந்து மண் அகழ்வதனால் சூழல் பாதிக்கப்படுகின்றது. அத்துடன், ஏ-9 வீதி திறக்கப்பட்டதைத் தொடர்ந்து பெருமளவு ஆற்றுமணல் யாழ். குடாநாட்டுக்கு எடுத்துச் செல்லப்படுவதையும் தடுக்கவே இந்த உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கண்டாவளையில் - தன்னங்கேணியாறு, முறிகண்டி 2 ஆம் கட்டையாறு, அக்கராயனிலுள்ள - நஞ்சுண்டகாட்டுக் கண்ணகிபுரம் ஆறு ஆகியவற்றிலேயே மண் அகழ்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (34)

# பட்டிருந்த தென்னைமரம் வயோதிபருக்கு எமனானது!

(யாழ்ப்பாணம்)

காணி துப்பரவுசெய்து கொண்டிருந்தவேளை, பட்ட தென்னை மரம் விழுந்ததில் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த வயோதிபர் ஒருவர் , சிகிச்சை பலனளிக்காதநிலையில் நேற்று முன்தினம் நள்ளிரவு மரணமடைந்தார்.

அரியாலை, பொன்னம்பலம் வீதியைச் சேர்ந்த - நாகமுத்து நவரத்தினம் (வயது 72) என்பவரே மரணமடைந்தவராவார்.

கடந்த ஞாயிறன்று வீட்டுக்காணியைத் துபபரவுசெய்யும் பணியில் ஈடுபட்டிருந்தபோதே, பட்ட தென்னைமரம் திடீரென முறிந்து விழுந்ததால் - சம்பந்தப்பட்ட நபர் இடுப்பில் பலத்த காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

எனினும், சிகிச்சை பலனளிக்காது நேற்று முன்தினம் இரவு இவர் மரணமடைந்தார். மரணவிசாரணை நேற்று நடைபெற்று, சடலம் அவரது மனைவியிடம் கையளிக்கப்பட்டது. (ச)

# சுப.வீரபாண்டியனுக்கு விதிக்கப்பட்ட சிறைத் தண்டனை நீதிமன்றத்தால் ரத்து

விடுதலைப்புலிகளை ஆதரித்துப் பேசியதற்காகச் சைதாப்பேட்டை நீதிமன்றத்தால் தமிழீழ விடுதலை ஆதரவாளரான சுப.வீரபாண்டியனுக்கு விதிக்கப்பட்ட இரண்டுவருடச் சிறைத்தண்டனையைச் சென்னை அமர்வு நீதிமன்றம் ரத்துச் செய்துள்ளது.

1995 ஆம் ஆண்டு புலிகளுக்கு ஆதரவாகப் பேசியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுச் சைதாப்பேட்டை நீதிமன்றத்தில், தமிழக அரசு இவர் மீது வழக்குத்தாக்கல் செய்திருந்தது. இந்த வழக்கில் சுப.வீரபாண்டியனுக்கு நீதிமன்றம் இரண்டுவருடச் சிறைத் தண்டனை விதித்திருந்தது.

இதையடுத்து, அவர் சென்னை அமர்வு நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்திருந்தார். இந்த மேன்முறையீட்டு மனுவை விசாரித்த சென்னை அமர்வு நீதிமன்றம், சுப.வீரபாண்டியனுக்கு விதித்த இரண்டுவருடச் சிறைத்தண்டனையை ரத்துச்செய்து, அவர் மீதான குற்றச்சாட்டுக்களில் இருந்து விடுவித்தது.

# வவுனியா-மன்னார் வீதியில் காவலரண்கள் தீக்கிரை !

வவுனியா - மன்னார் வீதியில் குழுகாட்டுச் சந்தியில் அமைந்திருந்த பொலிஸ் காவலரண்கள் நேற்று முன்தினம் இரவு சேதமாக்கப்பட்டு, இனந்தெரியாதோரால் தீக்கிரையாக்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸார் இந்தக் காவலரணில் கடமையிலில்லாத நேரமே இந்தச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

யுத்த காலத்தில் இந்தப் பொலிஸ் காவலரண்கள் அமைக்கப்பட்டன. சமாதான சூழல் காரணமாக இந்தக் காவலரண்களிலிருந்து பொலிஸார் வாபஸ் பெற்றுள்ளனர். இவ்வாறு கைவிட்டப்பட்ட காவலரண்களே சேதமாக்கப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

# விமோசனம் கிடைக்காத கைதிகள்!

## எத்தனை முறைகள் ஏமாற்றப்படுவது?

கடந்த சனியன்று முதல் மீண்டும் ஒரு விடுதலைக்கான முயற்சியில் களுத்துறை தமிழ் அரசியற் கைதிகள் இறங்கியுள்ளனர். இது ஒரு பருவகாலச் செய்தியாக எப்போதும் பேசபபட்டு வருகிறதேதவிர, யாரும் விடுதலை செய்யப்படுவதாக இல்லை.

இம்முறையும் தம்மை வந்து சந்திக்க வேண்டியவர்களின் பெயரை அறிவித்திருக்கிறார்கள் கைதிகள். மன்னார் ஆயர் இராயப்பு யோசெப், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ, அமைச்சர் மிலிந்த மொறகொட ஆகியோரே அவர்கள் சந்திக்க விரும்பும் மனிதர்கள்.

இராயப்பு யோசெப் கைதிகளின் வடுதலை தொடர்பாக அடிக்கடி பேசி வருபவர். ச்ர்வதேச அளவில் அறியப் படட வணக்கத்துக்குரிய பாதிரியார். பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் அடிக்கடி விடுதலைப் புலிகளின் அரசியல், இராணுவப் பிரமுகர்களைச் சந்தித்துப் பேசுபவர். அமைச்சர் மிலிந்த மொறகொட முதற்தடவை களுத்துறைக் கைதிகளின் உண்ணாவிரதத்தினைப் பார்வையிடச் சென்றபோது, ஒருமாத அவகாசம் கேட்டு, அக்காலப்பகுதிக்குள் பல கைதிகளின் விடுதலைக்கு ஆவன செய்வதாக உறுதியளித்தவர். இப் பட்டியலில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் இடம்பெறாதது துரதிஷ்டம்தான். அதைத் தீர்மானிக்கும் நிலைக்குக் கைதிகளைத் தள்ளியது அவர்களது வாயச் சவால்களும், எதையும் செயற்படுத்தும் வீரியம் அற்றவர்களாக இருந்ததும்தான், சங்கையாய் அல்லது கலகலப்பாய் அரசியல் நடத்துவதும், ஆணித்தரமாகக் கருத்து வைப்பதும் கைதிகளின் வேதனைகளுகக்ள் செல்லுபடியாகாது. அவ்வாறு செல்லுபடியாகக்கூடிய கௌரவததினைச் சிறைக்கைதிகள் மத்தியல் பெற்றிருந்த ஒரேஒரு தமிழ் அரசியல்வாதி 'மாமனிதர்' குமார் பொன்னம்பலம் மட்டும்தான்.

தற் போது களுத்துறையில் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களின் விபரம் பின்வருமாறு -

**B** பிரிவு, **D** பிரிவு, **A** பிரிவு ஆகிய பகுதிகளில் மட்டுமே கைதிகள் உள்ளனர். இதிலும் **B** வாட் 09 போ, **B3-16, B4-16,** குற்றம் நிருபிக்கப் பட்ட கைதிகள் (**Convicted Prisoners**) **B5-09, B6-09** ஆகியோரும், **D** பிரிவில் 16 பேரும், **A** பிரிவில் 05 பேருமாக 80 பேர் உண்ணாவிரதத்தில் குதித்துள்ளனர்.

முன்பு ஆயிரக்கணக்கான கைதிகள் தடுத்து வைக்கப்பட்டிருநத இச்சிறைச்சாலையில் தற்போது மிகக்குறைந்த அளவான கைதிகள் இருப்பதும், நாட்டின் எல்லாப் பாகங்களிலும் அமைதியும், இயல்பு நிலையும் இருப்பதும் கைதிகளை மிகவும் வேதனைப்படுத்தும் அதே வேளை, அவ்வாறு தடுத்து வைக்கப் பட்டுள்ளவர்களின் குடும்பத்தினரும் மிகவேதனையுடன் காலம் தள்ள வேண்டியுள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் சட்டத்துறையில் உள்ள பலவீனமும், பழிவாங்கும் எண்ணமுமே கைதிகள் விடுதலையைத் தாமதப்படுத்தி வருகிறது.

இலங்கையின் பிரதம நீதியரசர் சரத்.என்.சில்வா பிரதிவாதியாகக் குறிப்பிடப்பட்ட வழக்கொன்றினை, பிரதம நீதியரசரே விசாரணை செய்தது மட்டுமல்லாது, அவ்வழக்கினைத் தாக்கல்செய்த தொழிற் சங்கத் தலைவரான மைக்கேல் சில்வா என்பவருக்கு ஒரு வருட சிறைத்தண்டனையும் வழங்கப்பட்டுள்ளது. இந்நடைமுறையினை ஐ.நா. அதிகாரியான பரம் குமாரசுவாமி, தான் அதிர்ச்சியும் திகைப்பும் அடைந்துள்ளதாக அறிவித்திருப்பதுடன் "மக்கள் நீதி பெறுவதற்கே நீதிமன்றம் செல்கிறார்கள், அநீதி பெறுவதற்கல்ல. இவ்விவகாரம் எல்லோரினதும் மனசாட்சிகளை உறுத்தவேண்டும். தரமான நீதித்துறை செயற்படுவதற்கு இந்நாட்டு மக்கள்தான் முயற்சிக்க வேண்டும்" என்ற கருத்தையும் வெளியிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

பிரதம நீதியரசரின் நிலையே இவ்வாறு காணப்படும்போது, தமிழ் அரசியற்கைதிகளின் விசாரணைகளில் சிங்கள நீதிபதிகள் நியாயமாக எவ்வாறு நடந்துகொளவார்கள் என எதிர்பார்க்கமுடியும்.

முதலில் தமிழ் மக்களையும் இந்நாட்டின் பிரஜைகளாக கருதும் மனப்பக்குவம் சிங்கள ஆட்சியாளர்கள் மத்தியிலும், சகலதுறை சார்ந்தவர்களிடமும் ஏற்பட வேண்டும். அதன் பின்னணியிலேயே நூற்றுக்கும் குறைவான எண்ணிக்கையில் உள்ள தமிழ் அரசியற் கைதிகளின விடுதலை சாத்தியப்படும். இதில் வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுதது வைக்கப்பட்டிருக்கும் தமிழப் பெண் அரசியற்கைதிகளின் நிலை பற்றிப் பெரிதாக எதுவும் வெளித் தொ!வதில்லை. பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதானவர்களை விசாரிப்பதற்கென்று தனியான சிறப்பு நீதிமன்றம் ஒன்று வெலிக்கடையில் ஆரமபிக்கப்பட்டபோதிலும், குணாம்ச ரீதியாக ஏனைய நீதிமன்ற நடவடிக்கைகளில் இருந்து அது வேறுபட்டதாக இல்லை என்பது நடைமுறையில் தெரிகிறது.

கைதிகளின் விடுதலை தொடர்பாக வெகுஜனப் போராட்டம் ஒன்றினை ஏற்பாடுசெய்யும் முயற்சியில நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மேற்கொண்டு வருகின்றார்.

இவ்வெகுசனப்போராட்டம் வெறுமனே பாடசாலை மாணவர்களின் பங்கேற்பாக அல்லாமல், அரச இயந்திரத்தைப் பாதிக்கும் வல்லமை மிக்கதாகச் சகல தமிழ்மக்களும் ஏதோ ஒருவகையில் உணர்வுபூர்வமாகப் பங்களிப்புச் செய்வதாக அமைதல் வேண்டும். ஏற்கனவே சிறைகளிலிருந்து விடுதலையானவர்கள், அவர்களின் குடும்பத்தவர், தற்போது சிறையில் இருப்பவர்களின் குடும்பத்தினர், நண்பர்கள் எனச் சகல தரப்பினரும் இதில் பங்கேற்பது மிகவும் அவசியமாகும். இது உண்மையில் சிறைக்கைதிகளை மீட்டெடுக்கும் ஒரு நாகாஸ்திரமாக அமைதல் வேண்டும்.



இவ்விடயம் தொடர்பாகச் ச்ர்வதேச மனிதஉரிமை அமைப்புகளும், இலங்கைக்கு உதவி வழங்கும் அமைப்புகளும், நிரந்தர சமாதான வேலைத்திட்டங்களில் கருத்துத் தெரிவிப்பவர்களும் அரசுக்கு அழுத்தத்தினைக் கொடுக்க வேண்டும். தற்போது நாட்டில் நிலவுகின்ற சமாதானச்சூழல் தமிழ் அரசியல் கைதிகளுக்கு மட்டும் ஏன் வேப்பங்காய்க் கசப்பாக இருக்கவேண்டும். அவர்கள் இந்நாட்டுப் பிரஜைகள் இல்லையா?

ஒருநாட்டின் சட்டங்கள் எந்தளவிற்கு இயல்பு வாழ்க்கையையும், அமைதியையும், சந்தோஷத்தையும் ஒரு குடிமகனுக்கு வழங்குகிறதோ - அதுவே மேம்பாடான சமூகநெறியாகவும், நிலை பேறுள்ளதாகவும் இருக்க முடியும்.-

**விஜயன்**

# வன்னிப் பகுதி தொண்டராசிரியர்கள் கிளிநொச்சியில் மறியற்போராட்டம்

(யாழ்ப்பாணம்)

வன்னிப்பகுதிப் பாடசாலைகளில் பணியாற்றும் தொண்டராசிரியர்கள் தமக்கு நிரந்தர ஆசிரியர் நியமனம் வழங்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி நேற்றுமுன்தினம் இரண்டு இடங்களில் மறியற் போராட்டங்களை நடத்தியுள்ளனர்.

கிளிநொச்சி அரச அதிபரின் அலுவலகம் முன்பாகவும், கிளிநொச்சி வலயக்கல்விப் பணிமனைக்கு முன்பாகவும் இந்த மறியற் போராட்டங்கள் நடத்தப்பட்டன.

நேற்றுமுன்தினம் காலை 7.30 மணிமுதல் மாலை 4 மணிவரை நடத்தப்பட்ட இந்தப் போராட்டத்தில் ஈடுபட்ட தொண்டராசிரியர்கள் ஊதியமின்றிப் பல வருடங்களாகப் பணியாற்றும் தமக்கு, ஆசிரியர் நியமனம் வழங்கப்படவேண்டும் என அரசாங்கத்திடம் வலியுறுத்திக் கோரியுள்ளனர்.

தொண்டராசிரியர்களின் இந்தப் போராட்டத்துக்கு வன்னிப்பகுதியைச் சேர்ந்த ஏனைய ஆசிரிய சங்கங்களின் ஆதரவும் வழங்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

(க)

# மண்கும்பான் கடற்கரையில் இளைஞர் குழுக்கள் கைகலப்பு

(மண்கும்பான்)

யாழ்ப்பாணத்திலிருந்து சாட்டிக்குச்சென்ற இளைஞர்களுக்கும் - மண்கும்பான் கடலில் குளித்துக்கொண்டுநின்ற மண்கும்பான் இளைஞர்களுக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பில் முடிவுற்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இச்சம்பவம்பற்றித் தெரிய வருவதாவது- மேற்படி கடலில் குளித்துக்கொண்டு நின்ற 4 பெண்கள் உட்பட்ட, வெளிநாட்டிலிருந்து வந்தவர்களுடன் அங்குசென்ற இளைஞர் குழுவொன்று கடுமையாக நடந்துகொண்டதுடன், தகாத வார்த்தைகளாலும் பேசியுள்ளனர்.

இதனைப் பொறுக்கமுடியாத வெளிநாட்டிலிருந்து வந்தோர், மண்கும்பான இளைஞர்களிடம் உதவிகோரியதை அடுத்தே, இருபகுதிக்கும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுப் பின்னர் கைகலப்பாக மாறியதாகத் தெரியவருகிறது.(53)

## எங்கே போகிறோம்...?

நேசன்

# மனிதனை நேசிப்போம்...

மனிதன் உலக உயிர்களுள் உன்னதமானவன். தனது அறிவாலும், முயற்சியாலும் உயர்வின் உச்சங்களைத் தொட்டவன், தொடுகிறவன், இன்னும் தொடப்போகிறவன். மனிதனது மேன்மை சொல்லில் அடங்காதது. அவன் இதுவரை சாதித்தவைகளைப் பட்டியலிட்டுப் பார்த்தாலே வியப்பிலிருந்து மீளமுடியாது. இன்னுமின்னும் அவன் சாதிக்கத்தான் போகிறான்...

'உலக நாடுகளுள்ளே தற்கொலை செய்பவர்கள் அதிகமாயுள்ள நாடுகளில் இலங்கை இரண்டாமிடத்தை வகிக்கிறதாம்...

'சுருக்' கென்று இதயத்தில் முள்தைத்தமாதிரி இருக்கிறது.

எம்மையும் மீறி ஒரு கழிவிரக்கம் வருகிறது... 'ஐயோ பாவம்' என்றிருக்கிறது.

ப்ரச்சினைகளுக்கு முகம்கொடுக்க இயலாத கோழைகள் மரணத்தைத் தேர்ந்தெடுக்கிறார்கள்...

என்று உலகம் அவர்களை அலட்சியமாய் ஒதுக்கிவிடுகிறது.

சிலகண நேரத்து உணர்ச்சிக் கொதிப்பில் - ஆத்திரத்தில் - அவசரத்தில் தற்கொலை முடிவுக்கு வந்துவிடுகிறார்கள் இவர்கள். சிலர் படிப்படியாய் உலகத்தில் ஏற்படுகிற வெறுப்பில் - வாழ்வில் ஏற்படுகிற உடலுளத் துன்பங்களைத் தாங்கயியலாத ஒரு தவிப்பின் எல்லையில் ஏமாற்றங்களைத் தாங்கமுடியாத மனநொய்மையில் வாழ்வுக்கு மாற்றாகச் சாவைத் தெரிந்தெடுக்கிறார்கள்.

- கோழைகளென அவர்களை விமர்சித்து, ஒதுக்கி விடுவதால் அவர்களின் மரணங்களுக்கும் எமக்கும் சம்பந்தமில்லையென்று நாம் ஒதுக்கிக் கொள்ள முடியாது. எமக்கு மத்தியில், எம்மோடு ஒருவனாய், எம்மோடு தன் வாழ்வைப் பகிர்ந்து கொண்டிருந்த ஒருவன் - ஏதோ ஒரு காரணத்துக்காக உலகை வெறுத்து - வாழ்வை வெறுத்து - தன்னை வெறுத்து - தன்னை அழித்துக்கொள்கிறான் என்றால், அவனது அந்த முடிவுக்கும், எமக்கும் சம்பந்தமில்லாமல் போய்விடமுடியாது. அவனைச் சாக வைத்ததில் - சாகவிட்டதால் எமக்குச் சம்பந்தமில்லாமல் - நேரடித் தொடர்பில்லாமல் போகலாம்.

ஆனால், அவனை வாழவைப்பதில் - வாழ்வில் அவனுக்கு ஒரு பிடிப்பை ஏற்படுத்துவதில் - அர்த்தத்தைத் தோற்றுவிப்பதில் எமக்கு ஒரு மறைமுகப்பங்கு எப்போதுமே இருந்து கொண்டிருக்கிறது. நாம் மனிதர்களாக அவனோடு கூடவே வாழ்ந்து கொண்டிருக்கிற ஒரு காரணம்போதும் - எமது இந்தக் கடமையை எமக்கு நினைப்பூட்ட.

தனது எஜமானின் குரலை உணர்ந்து கொள்கிற - பிரசன்னத்தை உணர்ந்து கொள்கிற ஒரு சாதாரண நாயை, அவனது அன்பு எப்படிக் கட்டிப்போடுகிறது என்பதை நாம் பார்க்கிறோம் - அல்லவா? நன்றி உணர்வு எப்படிக் கட்டிப்போடுகிறது என்பதை நாம் அறிகிறோம் அல்லவா? - அறிவிற் குறைந்த ஒரு விலங்கையே மனித அன்பு கட்டிப்போட முடியுமெனில் - ஆட்டி வைக்க முடியுமெனில், மனிதனை அந்த மனித அன்பு எந்த அளவு தூரம் ஆட்கொள்ள முடியும் ? இதை ஏன நாம் உணர்ந்து கொள்வதில்லை. நுணுக்கமாய்ப் பார்த்துப் பார்த்து நமது தேவைகளை - சௌகரியங்களை - வசதிகளைக் காப்பாற்றிக் கொள்கிறோமே - அதேயளவு தேவை அடுத்தவனுக்கும் இருக்குமென நாமேன் புரிந்துகொள்வதில்லை. எமக்கென ஒரு உலகம் இருக்கிற மாதிரி, அடுத்தவனுக்கும் ஒரு தனி உலகம் இருக்குமென ஒப்புக்கொள்ள நாமேன் மறந்து போகிறோம்! நமக்கு ஒரு வலி - துன்பம் அடுத்தவனால் ஏற்படுத்தப் படுகையில், நாம் துடித்துப்போகிற மாதிரித்தானே அடுத்தவனுக்கும் இருக்குமென்கிற மனிதாபிமான அரிச்சுவடிகூட அறியாதவர்களாக இருந்துகொண்டு,

நாம் எதைப்படித்தென்ன எதைச்சாதித்தென்ன?

'நாம்' என்கிற கூட்டுக்குள் சுருங்கி, ஒடுங்கிக்கொண்டு நாம் நம்மையறியாமல் புரிகிற அழிப்புகள் எத்தனையென நாம் உணர்ந்து கொண்டுள்ளோமா?

பரவலாக இப்படி அடுத்தவரைப் பற்றி எண்ணிப்பாராமல் நாம் ஆற்றுகிற காரியங்கள் எமது அத்துமீறல்கள் - அராஜகங்கள் - ஆக்கிரமிப்புகள் எவை எவையென நாம் எப்போதேனும் சிந்தித்ததுண்டா?

இரக்கம் மறந்த - சிந்தனையில்லாத - சுயநலப் போக்குத்தான் இந்த உலகில் அடுத்தவரை - வாழ்வை வெறுத்துச் சாவுக்குத் தள்ளுகின்றன என்ற உண்மையை நாம் அறிந்துகொள்ள வேண்டும். மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவனிடமும் வாழ்வின் மீது ஒரு இயல்பான ஆர்வம், வாழ்வைப் பற்றிய எதிர்காலக் கனவுகள் - இவையெல்லாம் இருக்கந்தான் செய்கின்றன. இத்தகைய ஆர்வமும், கனவுகளும்தான் ஒருவனை வாழத்தூண்டுகின்றன. அவை ஆளுக்காள், அளவிலும், தன்மையிலும் மாறுபடக்கூடும். ஆனால், அவை நிச்சயம் இருக்கும். என்னநிலையில் - என்னதரத்தில் வாழ்ந்தாலும், மனிதனாக வாழும் ஒவ்வொருவனிடமும் தன்தன் வாழ்வு பற்றிய ஒரு முன வரைபு அடியுள்ளத்தில் இருக்கத்தான் செய்யும். இத்தகைய ஆர்வமும், ஆசைகளும் தருகிற உந்தல்தான் மனிதனை 'வாழ'த் தூண்டுகின்றன.

முயற்சியில் இருக்கும் ஒவ்வொருவனுக்கும் வெற்றிபற்றிய கனவிருக்கும் எதிர்பார்ப்பு ஆழமாக இருக்கிறவனை ஏமாற்றம் அதிகமாகத் தாக்கும் -

ஒரு பரீட்சையில் கிடைக்கிற வெற்றியை - ஒரு காதலை - ஒரு தொழில் முயற்சியில் எதிர்பார்க்கிற அடைவையென - எதனையேனும் தனது மிகப்பெரிய இலட்சியமாய், வாழ்வின்பேறாய்க் கருதுகிற ஒருவன், அது குறித்த வெற்றிகளைத் தவிர்க்க இயலாமல் எதிர்பார்க்கிறான்.

அந்த வெற்றி பற்றிய அவனது மனசின் எதிர்பார்ப்பு, அவனுக்குள் ஒரு பெரிய கற்பனைக்கோட்டையைக் கட்டியெழுப்பிவிடுகிறது - வெற்றி நிச்சயம் என எண்ணிக்கொண்டு அவன் முயற்சியைத் தொடர்கிறான்.

- எதிர்பாராமல் தலைகுப்புற நிகழ்ந்த வீழச்சியாய் ஏற்படுகின்ற பெரும் தோல்வி - பேரிடியாய் அவனைத்தாக்குகிறது.

அவன் நிலைகுலைந்து போகிறான். மனக்கண் முன் அவனது கோட்டை தகர்ந்துபோய்த் தவிடாகிக் கிடக்கிறது.

- இனி என்ன...? என்று சிந்திக்கையில் மனசில் சூழ்கிற அந்தகாரம் - அவனைக் கவ்விப்பிடிக்கிறது - இனி ஏன் எனக்கொரு வாழ்வென ஒரு கணப்பொழுது தருகின்ற விரக்தி உணர்வு அவனைத் தன்னைத்தானே அழித்துக் கொள்ளவைக்கிறது. - இதுபோலவே, தன் அன்புக்குரியோரின் புறக்கணிப்பும், அலட்சியமும் மென்மனது கொண்டோரை வாழ்வை விட்டோடவைக்கிறது.

இப்படித் தோற்றோடுவது நியாயம் என்று சொல்லவரவில்லை - இத்தகைய நிலைக்கு ஒருவன் வருவதற்குக் காரணமாய் அமைகிறவர்கள் - கூடவே அவனுடன் வாழ்கிறவர்கள் நினைத்தால், அவனைச் சாவிலிருந்து காப்பாற்ற முடியும். கொஞ்சம் புரிதல் - கொஞ்சம் இரக்கம் - கொஞ்சம் விட்டுக் கொடுப்பு- கொஞ்சம் மனிதநேயம் இவைபோதும் ஒருவனை வாழ்வைநோக்கி மீண்டும் அழைத்துவர. அன்பகத்தீர் ஒருபிடி அன்பு செய்வீரா? என நமது மண்ணின் அன்புக் கவிஞன் கேட்டதுதான் இப்போதும் காதில் ஒலிக்கிறது.

மீண்டும் சந்திப்போம்...




# ஐ.சி.சி. உலகக் கிண்ணம் - 2003




## கௌரவமான முறையில் ஓய்வுபெறுங்கள்


மத்தியஸ்தர் வெங்கட்ராகவன்


ஸ்ரீவ் பக்னர்

இனிவரும் போட்டிகள் மிகவும் எதிர்பார்ப்புடனும் விறுவிறுப்புடனும் நடைபெறப்போகின்றது. **Super Six** க்குள் நுழைந்த ஆறு அணிகளும் 'உயிரைக் கொடுத்தாவது, உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றுவோம்' என்ற நம்பிக்கையுடன் போராடப் போகின்றன. இதற்காக முழு அளவிலான கடும் பயிற்சிகள், கடந்தகாலத் தவறுகளைக் கண்டுபிடித்து - எதிர்காலத்தில் நிவர்த்திசெய்யக் கூடிய தீவிர ஆலோசனைகள் என்பவை நடைபெற்று வருகின்றன. புதிய புதிய யுக்திகள், மாற்றம் செய்யப்பட்ட **Batting, Bowling Orders** மற்றும் அணியின் கட்டமைப்பு இனிவரும் போட்டிகளில் அறிமுகப்படுத்தப்படப்போகின்றன. ஏன்....? வெற்றிக்கான நேர்த்திக் கடன்களும், தொழுகைகளும் நடைபெற்றுவருகின்றன. எல்லாம் சரி. இனிக் களத்தில் குதிக்கவேண்டியதுதான்.

மன்னிக்கவும், ஒன்றைமட்டும் மறந்துவிட்டோமே...! சில நடுவர்களின் தீர்ப்பு இனிமேலாவது, நீதி தளம்பாது, நிலை குழம்பாது இருக்க வேண்டுமல்லவா...? எவ்வளவுதான் திறமையுடனும், விழிப்புடனும் விளையாடினாலும் கூட, நடுவர் ஒருவரின் தீர்ப்பு தவறாக அமைந்துவிட்டால் உயிரே போய்விடும் அல்லவா...?

'உயிரைச் சுட்டிக்காட்டப்படுகின்றது என்று கேட்டால், உடனடியாக, அசோகா டீ சில்வாதான் என்று பதில் வருமே...! தவறில்லை. அசோகா டீ சில்வா போன்றோரின் அட்டகாசம் இன்று உலகெல்லாம் பேசப்படுகின்றது.

வீ.ஏ.கோவி.

இன்னொரு கவலைக்குரிய விடயம் **Mr.A. De Silva** அதிகமாக இந்தியாவுக்கே பாதகமாகத் தோன்றுகின்றார். அதிலும் கூடுதலாகச் சச்சின் டெண்டுல்கருக்கே பரம விரோதியாகக் காணப்படுகின்றார். **I.C.C Champion** ஆட்டத்திலும் சரி, இந்தியா - நியூசிலாந்தில் சென்று ஆடிய ஆட்டத்திலும் சரி, இன்னும் எத்தனையோ ஆட்டத்தில் அசோகா டீ சில்வா இந்தியாவுக்கு எதிராகப் பாதகமான முடிவுகளையே காட்டியுள்ளார் என்பது வெளிப்படை.

இந்தியா - அவுஸ்திரேலியா அணியுடன் விளையாடிய போது, அடுத்தடுத்து விக்கெட்டுக்களை இழந்து இக்கட்டான நிலையைச் சந்தித்த இந்தியா... நம்பிக்கை நட்சத்திரமான, யுவராஜ்சிங்கின் வருகையால் சற்றுத் தெம்படைந்து காப்பாற்றுவார்..., வெற்றிக்காக அல்லது கௌரவமான தோல்விக்காகப் பாடுபடுவார்... என்றெல்லாம் நம்பியிருந்தபோது, எதிரணியினரால் கடும் தொனியில் **Appeal** கேட்கப்பட்டபோது, சற்று நேர மௌனத்தின் பின்னர் அவர் கொடுத்த **Out** அவ்வளவு திருப்திகரமாக இல்லை என்பதுடன்,

யுவராஜ் சிங்கின் **Out** உடன் எஞ்சியிருந்த நம்பிக்கையும் தவிடுபொடியாகியது. இந்தியா சொற்ப ஓட்டங்களுக்குள் சுருண்டது.

பல்லாயிரக்கணக்கான பார்வையாளர்களின் ஆரவாரத்திலும், கூச்சல் கும்மாளத்தின் நடுவிலும் நெடுநேரம் நின்ற களைப்பிலும், **Fielding** செய்யும் அணி ஒரே குரலில், பலத்த தொனியில் **Appeal** கேட்டபோதும், அதிகம் பாதிப்படைந்து, எந்தவிதமான கூச்சமும், தயக்கமும் இன்றி உடனடியாக **Out** கொடுக்கும் இவர்கள் போன்றோர், இக்கட்டான சூழ்நிலைகளில் அணிகளின் தலைவிதிகளையே மாற்றிவிடுகின்றார் என்பது வேதனையே.

**I.C.C Champion** கிண்ணப் போட்டியில் **L.B.W** க்கு **Third Umpire** மூலம் தீர்ப்பு வழங்க ஏற்பாடுசெய்யப்பட்டு ஓரிரு போட்டிகளில் நடைமுறைப்படுத்தப்பட்டது. தொடர்ந்த அந்த நடைமுறை அமுல்படுத்த முடியாததன் காரணம்தான் என்ன..?

சோக முடிவுகளை, இடையிடையே அள்ளிக் கொடுக்கும் ஒரு சில நடுவர்களே, இனிமேலாவது கண்ணைத் திறவுங்கள்.. **Semi Final, Final** போன்றவற்றுக்கு வந்து அணிகளின் தலைவிதிகளை மாற்றிவிடாதீர்கள், வீரர்களினது, ரசிகர்களினதும் கண்ணீர் வெள்ளத்திற்கும், கோபக் கனலுக்கும் காரணமாக அமையாதீர்கள்... நல்லதையே செய்யுங்கள் அல்லது கௌரவமான முறையில் ஓய்வுபெறுங்கள்!

### சுப்பர்சிக்ஸ் போட்டி விபரம்

மார்ச் 07
அவுஸ்திரேலியா எதிர் இலங்கை
இந்தியா எதிர் கென்யா
மார்ச் 08
சிம்பாப்வே எதிர் நியூசிலாந்து
மார்ச் 10
இந்தியா எதிர் இலங்கை
மார்ச் 11
அவுஸ்திரேலியா எதிர் நியூசிலாந்து
மார்ச் 12
சிம்பாப்வே எதிர் கென்யா
மார்ச் 14
இந்தியா எதிர் நியூசிலாந்து
மார்ச் 15
சிம்பாப்வே எதிர் இலங்கை
அவுஸ்திரேலியா எதிர் கென்யா

### நாளும் ஒரு வினா

**ODI களில் தொடர்ந்து 12 முறை வென்று அவுஸ்திரேலியா சாதனை படைத்துள்ளது. இதற்கு முந்திய சாதனை?**

**மேற்கு இந்தியா பதினொரு முறை தொடர்ந்து வென்றமை.**

## மன்னவனே அழலாமா?

நிர்மலன்

2003 ஆம் ஆண்டு உலகக் கிண்ணம் உட்பட, கடந்த மூன்று உலகக்கிண்ணப் போட்டிகள் உள்ளடங்கலாக நான்கு உலகக் கிண்ணப் போட்டிகளிலும், தென்னாபிரிக்கா உயர்மட்டத் தரத்திலேயே பங்குபற்றியது. அவர்களது திறமைக்கு நான்கு முறைகளிலும், குறைந்தது இரண்டு தடவையாவது உலகக்கிண்ணத்தை வென்றிருக்க வேண்டும். மூன்றுமுறை என்றால்கூட மிகையில்லை. ஆனால், ஏனோ தொடர்ந்து ஏமாற்றம். ஒரு தடவை ஷோண் பொல்லொக் கருத்துக் கூறுகையில் - மிகத் திறமையாக நாங்கள் விளையாடுகின்றோம். ஆனால், முடிவினை ஏற்படுத்துவதில் மட்டும் ஏதோ பிசகுகிறதே என்கிறார்.

ஆனால், ரசிகர்கள் அப்படி எண்ணவில்லை. எல்லாக் காரணங்களுக்கும் மேலாக அதிர்ஷ்ட தேவதை தென்னாபிரிக்காவிடம் இருந்து சரியான நேரம் பார்த்து ஒதுங்கிக்கொள்கிறாள் போலவே தோன்றுகின்றது. இல்லாவிட்டால், தென்னாபிரிக்காவும் அதன் ரசிகர்களும், பொதுவில் எல்லா ரசிகர்களும் வேதனைப்படும்படியாக தென்னாபிரிக்கா ஒவ்வொரு தடவையும் ஏதோ ஒரு கட்டத்தில் கிண்ணத்தை ஏக்கத்துடன் பார்க்கும் நிலை தோன்றியிராது.



சோகம் தொடர்கதைதானா...?

மிகநீண்ட வருடங்கள் சர்வதேச கிரிக்கெட் பங்கேற்பில் இருந்து தடுத்துவைக்கப்பட்ட தென்னாபிரிக்கா அந்நிலை நீங்கி 4 மாதங்களில் 1992 இல் முதன் முதலாக உலகக்கிண்ணப் போட்டிகளில் கலந்துகொண்டது. கலந்துகொண்ட அணி மிகவும் விறுவிறுப்பாக ஒவ்வொரு ஆட்டத்திலும் முன்னேறி அரை இறுதிப் போட்டியில் இங்கிலாந்தைச் சந்தித்தது. இந்தச் சுற்றுப்போட்டியில், புதியவை பல. அந்தப் பலவற்றுள் ஒன்று, மழையால் ஆட்டம் தடைப்பட்டால் ஓட்டவிகிதம் கணிக்கும் முறை. இந்த முறைகள் பலராலும் **"JOKE"** என்று கிண்டலுக்குள்ளானவை. ஆட்டத்தின் இறுதிக் கட்டத்தில் மழை கொட்டத் தொடங்கியபோது, வெற்றிக்குத் தென்னாபிரிக்கா எடுக்கவேண்டியிருந்தது 13 பந்துகளில் 22 ஓட்டங்கள். மாற்றம் இல்லாமல் பந்துவீச்சுக்களில் மாற்றம் ஏற்பட்டுக்கொண்டே வந்தது. 13 பந்து 22 ஓட்டம் என்றிருந்தது. அதே எண்ணிக்கை 7 பந்துகளில் என்றிறங்கி, இறுதியில் 22 ஓட்டங்கள் ஒரு பந்தில் என்று வந்து முடிந்தது. மழையால் தடைப்பட்ட அந்தப் பன்னிரண்டு நிமிடங்கள் தென்னாபிரிக்காவை எவ்வாறு வஞ்சித்துவிட்டது. சகலதுறை வீரர் பிறைன் மக்மிலன், விக்கெட் கீப்பர் டேவ் றிச்சட்சன் இருவரும் களமிறங்கியபோது, அவர்கள் எடுக்க நிர்ணயிக்கப்பட்டிருந்தது ஒரு ஓட்டம் மட்டுமே.

இந்தத் துயரத்தில் இருந்து மீண்ட தென்னாபிரிக்கா மீண்டும் 1996 இல் இன்னொரு வகையில் முன்னேறும் வாய்ப்பை இழந்தது. அதனை அதிர்ஷ்டதேவதையின் மீது சுமத்திவிடமுடியாது. அங்கு கால் இறுதிப் போட்டியில் பிறைன் லாறாவின் 94 பந்துகளில் எடுத்த 111 தென்னாபிரிக்காவை **KNOCK OUT** ஆக்கியது. இங்கு தென்னாபிரிக்காவை வீழ்த்தவென்றே தெய்வீக சக்தியுடன் வந்திறங்கிய பிறைன் லாறா என்றார்கள் விமர்சகர்கள். இந்த ஆட்டத்தில் கூட வெற்றி வித்தியாசம் பத்தொன்பது ஓட்டங்கள் மட்டும்தான்.

திரும்பவும் இன்னொரு தென்னாபிரிக்க எழுச்சியும் - வீழ்ச்சியும் அதுவே என்பது பல விமர்சகர்களின் கருத்து. சுப்பர் சிக்ஸில் அவுஸ்திரேலியாவிடம் தென்னாபிரிக்கா தோல்வி கண்டது. ஆனால், அரை இறுதிப்போட்டியில் அவுஸ்திரேலியாவின் தோல்வியில் எவ்வித சந்தேகமும் இல்லை.

லான்ஸ் குளூஸ்னர் 49 ஓவரின் இரண்டாவது பந்தை பவுண்டரியாக அடித்தபோது தென்னாபிரிக்க அணியின் ஓட்ட எண்ணிக்கை 213. இதுவே அவுஸ்திரேலியாவின் எண்ணிக்கையும். மறுபுறம் நிற்கிறார் அலன் டொனால்ட். இன்னொரு ஓட்டம் **GOLDEN ONE**. என்ன பரிதாபம் விதியின் விளையாட்டு அலன் டொனால்ட்டின் தடுமாற்றம் என்ற வடிவத்தில் வந்தது. ரன் அவுட். **MATCH OVER**. ஆட்டம் **TIED**. முன்னைய ஆட்ட முடிவுகளின்படி **SA OUT**, அவுஸ்திரேலியா **IN**. என்ன பரிதாபம்.

அடுத்தது, இன்னமும் நெஞ்சத்தைப் பொசுக்கும் அந்தத் திங்கட்கிழமை. அதனை விபரித்து கிரிக்கெட் ரசிகர்களின் வேதனையை இன்னமும் உக்கிரப்படுத்த வேண்டுமா? எந்தவிதமான கிரிக்கெட் அணி ரசிகர்கள் என்ற பேதமும் இன்றி உலக ரசிகர்கள் எல்லோரும் மனம் கலங்கிய சம்பவம் அது. இங்கு விதி எண்களையே தன் ஆயுதமாகப் பாவித்திருக்கிறது. அதிரஷ்டத்தை அதன் பலத்தை நம்பாதவர்கள் கூட இப்போது அதனை நம்புகிறார்கள். அடுத்தது என்ன?

தென்னாபிரிக்கா 2007 இல் பீனிக்ஸ் பறவையாக எழுமா என்பதே எல்லோர் மனதிலும் உருவாகியுள்ள கேள்வியாகும். அதனையே அவர்கள் செய்ய வேண்டும். ஏனெனில், தென்னாபிரிக்கா கிரிக்கெட் வளம் என்பது கிம்பர்லி வைரச்சுரங்கங்கள் போன்றது, தங்கச் சுரங்கங்கள் போன்றது. இந்த வளம் அதியுயர் வளம். தென்னாபிரிக்க ஒவ்வொரு வீரரும் அப்படியே. எனவே, ரசிகர்கள் உங்களுக்கு வாழ்த்துக் கூறுகிறார்கள். இன்று உங்கள் துன்ப உணர்ச்சியை உங்களிடம் மட்டும் விட்டுவிட்டு ரசிகர்கள் விலகிவிடவில்லை. உங்கள் வேதனையில் உலக கிரிக்கெட் ரசிகர்கள் உணர்வோடு கலந்து கொள்கிறார்கள். இதுவரை நடைபெற்ற 2003 இற்கான உங்கள் பங்களிப்புக்கு நன்றி கூறுகிறார்கள்.

அதிர்ஷ்ட தேவதைக்கு உங்களைத் தழுவிக்கொள்ளும் அதிர்ஷ்டம் இல்லை அவ்வளவுதான். **BETTER LUCK NEXT TIME SOUTHAFRICA!**

## அசைக்கமுடியாது

ஜோசப் கிருஷ்ணா

ஜேஸன் ஜிலெஸ்பி குதிக்காலில் ஏற்பட்ட உபாதையொன்றின் காரணமாக, 2003 உலகக்கிண்ணப் போட்டிகளிலிருந்து இடையில் வெளியேறுகிறார். இவர் முதல் சுற்றின் இறுதி இரண்டு ஆட்டங்களிலும் காயத்தின் காரணமாக விளையாடவில்லை. இதுபற்றி ஜிலெஸ்பி மிகவும் மனம் வருந்துகிறார். 1999 உலகக்கிண்ணக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியிலும் இதேநிலைக்கு ஜிலெஸ்பி உள்ளானார். அவரைத் துரதிர்ஷ்டம் துரத்துகிறது. இதேவேளை நாதன் பிரெக்கன் பதினொரு ஒருநாள் ஆட்டங்களின் அனுபவம் மட்டும் கொண்டவர். இவருக்குப் பதிலாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள இடதுகை வேகப்பந்து வீச்சாளர் அவர். இடதுகை வேகப்பந்து வீச்சாளராக இருப்பதே தெரிவுக்கு முக்கிய காரணம்.


பிரெட் லீ


ஷேன் வோர்ண்


பிராட் ஹொக்

இதேவேளை - அவுஸ்திரேலியாவுக்கு ஜிலெஸ்பியின் வெளியேற்றம் ஒரு "தாக்கம்" என்று சில விமர்சகர்கள் கருதுகிறார்கள். இது சரியாக இராதென்றே கருதவேண்டும். வரிசையாகப் பார்த்தால் மார்க்வோ நீக்கம், அதன் பின் ஸ்ரீவ்வோ நீக்கம் என்று தொடர்ந்து தென்னாபிரிக்காவில் வந்திறங்கியபோதே அவுஸ்திரேலியாவுக்கு எந்தக்குறையும் இல்லை. பின்னர் திடீரென்று ஏதேதோ நடந்து, ஷேன் வோர்ன் வெளியேறினார். ஓரளவுக்கு இது இழப்புத்தான் என்றே விமர்சகர்கள் கருதினர். நடந்து முடிந்த 6 ஆட்டங்களிலும் ஷேன் வோர்னை நினைக்கக்கூட நேரமில்லை.

அந்த வகையில், இப்போது ஜேஸன் ஜிலெஸ்பி. இவரையும் நினைக்க நேரமிராது என்றே தோன்றுகின்றது. ஏனெனில், பிரெட் லீ, மக்ரா, அன்ட்ரூ பைக்கல், பிரட் ஹொக் இன்னும் புதிய பிரெக்கன். அசையுமா **AUSSIES. NO.?** ஆனால், விக்கெட்டுக்கள் அதிரும்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# சந்தேகநபர்களைத் தொடர்ந்தும் தடுத்துவைத்தல் நியாயமில்லை

## அரசியற்துறைப் பொறுப்பாளர் தெரிவிப்பு

அரசாங்கத்துடன் நேரடியாகப் போரில் ஈடுபட்டு வந்த விடுதலைப் புலிகள் இயக்கத்தினரான எமக்கு சமாதானப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர், சுயமாகச் செயற்படக் கூடியதாக உள்ளது. ஆனால், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ், சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்களைத் தொடர்ந்தும், தடுத்து வைத்திருப்பது, எந்தவித நியாயமற்றது. அவர்கள் வெறும் சந்தேக நபர்கள். அவர்களை விடுதலை செய்ய வேண்டும்.

இவ்வாறு - விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டு, சாகும்வரை உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருக்கும் தமிழ்க்கைதிகள் தொடர்பாகவே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நேற்று 5 ஆவது நாளாக, உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள தமிழ் அரசியற்கைதிகள் - பலமுறை முன்பும், பல போராட்டங்கள் நடத்தியும், பலனளிக்காததாலேயே, அவர்கள் மீண்டும் சாகும்வரை உண்ணாவிரதத்தை மேற்கொண்டு வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# இராணுவச் சமநிலை, இயல்புநிலை பிரபாவுடன் விரிவாக ஆராய்ந்தோம்

## கண்காணிப்புக்குழுத் தலைவர்கள் தெரிவிப்பு



பிரபாவுடனான சந்திப்பில் கண்காணிப்புக்குழுவினர்

(கிளிநொச்சி)

விடுதலைப் புலிகளுக்கும் - அரச படையினருக்கும் இடையிலான இராணுவச் சமநிலை பேணப்படுவது தொடர்பாக எழுந்துள்ள நிலைமைகள் குறித்து, நாம் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுடன் நேற்று விரிவாக ஆராய்ந்தோம் என யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் புதிய தலைவர் ரெலவ்சன் கருத்துத் தெரிவித்தார்.

பிரபாகரனுடனான சந்திப்புக் குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

முக்கியமான நிலைமைகளில் இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினராகிய நாம் எவ்வாறு சுமுக நிலையைப் பேண முடியும் என்று ஆராய்ந்தோம் எனவும் குறிப்பிட்டார்.

இதேவேளை, போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் முன்னாள் தலைவர் புறூவ் ஹொவ்டே கருத்துக் கூறுகையில் -

நாம் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைச் சந்தித்து மேற்கொண்ட பேச்சுக்கள் எல்லா வகையிலும் சிறப்பாக அமைந்தன. முன்னைய பேச்சுக்களில் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பாக மீளவும் பேச்சுக்களில் ஆராயப்பட்டதுடன், சந்திப்பின்போது இயல்பு நிலை விவகாரங்கள் பற்றியே கூடுதலாகப் பேசினோம்.

அண்மையில் கைது செய்யப்பட்ட அரச படைக் கைதிகளின் விடுதலை தொடர்பாகவும் பேசித் தீர்வு கண்டோம். இதேபோன்று அரச படைகளினால் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப்புலி உறுப்பினர்கள் தொடர்பாகவும் விரைவான முடிவு எட்டப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### துப்பாக்கிச் சத்தங்கள்...

இச்சந்திப்பின்போது - படையினரால் கைதுசெய்யப்பட்டு, காவலில் வைக்கப்பட்டுள்ள ஆறு போராளிகளையும் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என, தலைவர் பிரபாகரன் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரைக் கேட்டுக்கொண்டார்.

போர்நிறுத்த மீறல் சம்பவங்கள் மற்றும் ஏதாவது அசம்பாவித சம்பவங்கள் நடந்தால், அதனை உடன் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் தெரிவிக்க வேண்டும் எனவும் தலைவர் பிரபாகரன் சந்திப்பில் சுட்டிக்காட்டினார்.

இதனை அரசிடம் வலியுறுத்துமாறும் கண்காணிப்புக்குழுவிடம் கேட்கப்பட்டது. கைதுசெய்யப்படுவோர் நீதிமன்றங்களிலோ, பொலிஸாரிடமோ ஒப்படைக்காது, போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் ஒப்படைக்க வேண்டும். அதனைத் தீர்த்து வைக்கும் பொறுப்பு அவர்களிடமே விடப்பட்டுள்ளது என்றும் பிரபாகரன் வலியுறுத்தினார். ஓராண்டு புரிந்துணர்வு காலத்தில் ஒப்பந்தத்தின் சில விதிமுறைகளை, நிபந்தனைகளை, கட்டுப்பாடுகளை, படையினர் நிறைவேற்றாத விடயத்தினை சுட்டிக்காட்டிய தலைவர் பிரபாகரன்,

- இது சமாதான முயற்சியில் படையினருக்கு உண்மையான, நேர்மையான நம்பிக்கையின்மையையும் எடுத்துக்காட்டுகிறது என்பதையும் குறிப்பிட்டார்.

பெண்போராளிகள் படையினரால் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டமை, ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளில் படையினர் ஈடுபடுகின்றமை, போராளிகள் அசிங்கப்படுத்தப்படுகின்றமை பொதுமக்கள் சுடப்படுகின்றமை ஆகியன படையினரால் மேற்கொள்ளப்படுகின்ற போதிலும், தளம்பாமல் பொறுமை காத்து, நாம் சமாதானத்தைக் கடைப்பிடித்து வருகின்றோம்.

ஆனால், அரசு எம்மீது பொய்க் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி வருகின்றது என்று தேசியத் தலைவர் கண்காணிப்புக் குழுவினரிடம் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த - புதிய கண்காணிப்புக்குழுத் தலைவர், முடிந்தளவு தானும் விடுதலைப் புலிகளுடன் ஒத்துழைத்து சமாதான முயற்சிகளைத் தொடர்ந்து பலப்படுத்துவதற்கு, இயல்பு நிலையைக் கொண்டுவர முயற்சிப்பதாக உறுதி அளித்தார். சந்திப்பின் பின்னர் புலிச் சின்னம் பொறிக்கப்பட்ட நினைவுப் பரிசு ஒன்றை கண்காணிப்புக்குழுவின் புதிய தலைவருக்கு தேசியத் தலைவர் வழங்கினார்.

### தலைவர்...

பணிப்புரையை வழங்கினார்.

விடுதலைப் புலிகள், போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு மீது வைத்துள்ள கௌரவத்தை எடுத்துக்காட்டு முகமாகவும்,

சமாதானத்தின்பால் புலிகள் கொண்டுள்ள அர்ப்பணிப்பை வெளிப்படுத்துமுகமாகவும் இக்கைதிகள் விடுவிக்கப்படுவதாக தலைவர் பிரபாகரன் அப்போது தெரிவித்தார்.

மணலாறில் இராணுவச் சிப்பாயும், முகமாலையில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரும் அத்துமீறி புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் நுழைந்த வேளையில் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டிருந்தனர்.

படையினர் விடுவிப்பு தொடர்பாக கொழும்பில் போர்நிறுத்தக் கண்காணிப்பு அலுவலகம் விடுதத செய்திக்குறிப்பில் - போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு விடுதலைப் புலிகள் தமது நல்லெண்ணத்தைக் காட்டுமுகமாகவே படையினரை விடுவிக்க புலிகளின் தலைமை இணங்கியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இராணுவக் கோப்ரல் நிமால் குமார, பொலிஸ் கான்ஸ்டபிள் டி. எஸ்.ஏ.குணசேகர ஆகியோர் கண்காணிப்புக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டு, நேற்றுமாலை உலங்குவானூர்தி மூலம் கொழுமபு பாதுகாப்பு அமைச்சு அலுவலகத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

## தொண்டர் ஆசிரியர் பகிஷ்கரிப்புப் போராட்டம்

வட - கிழக்கில் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்காததைக் கண்டித்து, எதிர்வரும் 11 ஆம் திகதி மாவட்ட ரீதியாக வட-கிழக்கு பாடசாலைகள் அனைத்தும் ஒன்றிணைந்து, பகிஷ்கரிப்பு போராட்டத்தை நடத்தவுள்ளன.

இப் போராட்டத்தினை தமிழர் ஆசிரியர் சங்கமும், தொண்டர் ஆசிரியர் சங்கமும் இணைந்து நடாத்துகின்றன.

நேற்று யாழ்.வலயக் கல்விப் பணி மனையில் கேட்போர்கூடத்தில் நடைபெற்ற கல்விப்பேரவை கூட்டத்தில் இது குறித்து தீர்மானிக்கப்பட்டது.

பேராசிரியர் சண்முகதாஸ் தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது. கடந்த 99 ஆம் ஆண்டு ஆயிரம் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதென அரசு உறுதியளித்தது. எனினும், உலகவங்கி இந்நியமனத்தை ஏற்க மறுத்துவிட்டது. கடந்தகால அரசும் அமைச்சரவையில் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதென தீர்மானம் எடுத்தும் நிறைவேற்றத் தவறியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கக்கோரி இப் போராட்டத்தினை மாவட்ட ரீதியாக வட - கிழக்கில் நடாத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# பெண்கள் விவகார உபகுழுக் கூட்டம் நேற்று கிளிநொச்சியில் ஆரம்பமானது!



பெண்கள் விவகாரங்களுக்கான உபகுழுவின் முதலாவது சந்திப்பு, கிளிநொச்சியில் உள்ள விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் நேற்று ஆரம்பமாகியது.

இந்தச் சந்திப்பின்போது - தமிழீழ விடுதலைப்புலிகளின் தரப்பில் தமிழினி சுப்பிரமணியம், பிரமிளா சோமசுந்தரம், யாழிசை பாலசிங்கம், சுமதி சண்முகராசா, காயா சோழ சுந்தரம் ஆகியோரும் -

அரச தரப்பில் - கலாநிதி குமாரி ஜெயவர்த்தனா, கலாநிதி தீபிகா உடகம, குமுதினி சாமுவேல், வை. எம்.சகாரியா மற்றும் கலாநிதி பசீலா றியாஸ் ஆகியோரும் பங்குபற்றினர்.

இந்தக் கலந்துரையாடலில் - விடுதலைப் புலிகள் தரப்பு பிரதிநிதிகளில், வள அணியினராக பத்மினி சிதம்பரநாதன், அமுதா கந்தசாமி ஆகியோர் பங்குபற்றினர்.

இக் கலந்துரையாடலில் பல்வேறு விடயங்கள் குறித்து ஆராயப்பட்டது. இன்றும் தொடர்ந்து இக் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

(க)

### தமிழக...

மீன்பிடிப்படகுகளுடன் இந்தியக் கடற்படைப்படகு என்று சந்தேகிக்கப்படும் படகு ஒன்றையும் உள்ளூர் மீனவர்கள் அவதானித்தனர்.

அப்படகில் இருந்தவர்கள் கடற்படைச் சீருடைகள் எதுவுமின்றி சாதாரண மீனவர்களைப் போலவே உடை அணிந்திருந்தனர். எனினும், அவர்களில் சிலர் ஆயுதங்களை வைத்திருந்ததையும் அவதானிக்க முடிந்தது.

இந்திய மீனவர்களின் படகை உள்ளூர் மீனவர்கள் சுற்றிவளைத்த போது, சந்தேகத்துக்கிடமான அந்தப்படகு அங்கிருந்து தப்பிச் சென்றுவிட்டது.

### மண்டபம்...

பட்டது. முகாமை நோக்கி கற்கள் வீசப்பட்டன. எனினும், எவருக்கும் சேதம் ஏற்படவில்லை.

தற்போது, அப்பகுதிக்கு விசேட பொலிஸ் படைப்பிரிவு அழைக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. (200)

### மேலும் 21...

தொடர்ந்து இம்மீனவர்கள் அனைவரும் நேற்று மாலை ஊர்காவற்றுறை நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர். இம் மாதம் 14 ஆம் திகதி வரை இவர்களுக்கு தடுப்புக்காவல் உத்தரவினை நீதிவான் வங்கியுள்ளார். (க,லி)

SPOKEN ENGLISH WITH GRAMMAR
LECTURES BY:-MR.M.A.HARI
புதிய பிரிவு:- 06.03.2003
வியாழக்கிழமை
(இன்று) மாலை
5 மணி.
TUE } 5 P.M - 6 P.M
THU
HARY'S
INSTITUTE
NO 564, கஸ்தூரியார் வீதி,
(யாழ்.இந்து ஆரம்ப பாடசாலைக்கு அருகில்)
யாழ்ப்பாணம். (சி/657)

## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:-

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.65 | 97.08 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 152.53 | 153.83 |
| 1 யூரோ | 104.99 | 106.17 |
| 1 சுவிஸ் பிராங் | 71.83 | 72.98 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 58.95 | 59.98 |
| 1 ஜப்பானிய யென் | 00.81 | 00.82 |
| 1 சவூதி றியால் | 25.84 | 25.84 |

## மரண அறிவித்தல்

### அமரசேனாதிபதி பரமகுரு

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த அமரசேனாதிபதி பரமகுரு நேற்றுக் காலமானார். அன்னார், காலஞ்சென்றவர்களான அமரசேனாதிபதி-பர்வதா பத்தினி தம்பதிகளின் அன்பு மகனும், சறோஜினிதேவியின் அன்புக் கணவரும், கோ.கவிதா, காலஞ்சென்றவர்களான நந்தினி, அமுதா ஆகியோரின் தந்தையும், கோணநாயகம் அவர்களின் மாமனாரும், மு.குமரேஸ்வரி, ச.பங்கேஸ்வரி, காலஞ்சென்ற அ.குமரகுரு ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற தில்லையம்பலம் மாரிமுத்து தம்பதிகளின் மருமகனும், மா.கமலாதேவி, தி.நவரத்தினம், செ.சிவரூபராணி ஆகியோரின் மைத்துனரும், வெ.மாணிக்கத்தியாகராசா, ந.செந்திவடிவேலு, ந.ஞானலஷ்மி,ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று பி.ப 5 மணிக்கு நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:-
மு.புவனேஸ்வரி
ச.பங்கேஸ்வரி,
அ.குமரகுரு.

தீருவில் வீதி,
வல்வெட்டித்துறை. (சி/658)

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 06.03.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.